# புலவர் பேரறிஞர் ஐவர்

★

ஆசிரியர்

திரு. D. K. நந்திகேசுவர முதலியார் அவர்கள்
சென்னை நகராண்மைக் கழக கலாசாலை.

நூலாசிரியர் :
“ நமது விசித்திர உலகம் ”, “ தமிழ் நாட்டுப் பேரறிஞர்”, “ இந்தியப் பேரறிஞர் ஐவர் ” முதலியன.

★

பிரசுரகர்த்தர்

**சுதந்திரா பப்ளிஷர்ஸ்**

தலைமை காரியாலயம் : **சேலம்.**

கிளை : திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை - 5

பதிப்புரிமை] 1952 [விலை அணா 14

PRINTED AT
SARADA PRESS
21, Ranganatham Street, Triplicane, Madras - 5

# பாயிரம்

தொன்மைத் தமிழகத்தில், வழிவழி வந்த புலவர் பேரறிஞர்களைப் பற்றிய எழுத்தோவியங்களைச் சித்தரிப்பது எளிதன்று. அவர்கள் வாழ்நாள் சிறப்புகளைக் கற்பவர் மனவெழுச்சியுடன் வாசித்து நலம்பெறச் செய்வது நம் நோக்கமாகும். அதுபற்றி ஈண்டு என் பணி ஒரு வகையில் முடித்தோம்.

இதன் கண் மிளிரும் கதைப் போக்கும், தமிழ் நலமும் சிறந்து அமைந்தது குறித்து நமது மட்டற்ற மகிழ்ச்சி.

இதிற் கொள்ளப்பட்ட பொருள் அனைத்தையும் ஏற்று தமிழகம் இதனை ஆதரிக்க என் தெய்வப் பிரார்த்தனைகள்.

திருவல்லிக்கேணி,
சென்னை
9—11—52

இங்ஙனம்
அன்பன்,
திரு. டி. கே. நந்திகேசுவரன்.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | ஔவையார் | 1 |
| 2. | கம்பர் | 34 |
| 3. | ஒட்டக்கூத்தர் | 60 |
| 4. | குமர குருபரர் | 73 |
| 5. | பிசிர் ஆந்தையார் | 91 |

# புலவர் பேரறிஞர் ஐவர்

## ஔவையார்

### கல்வி அழகு ஒப்பற்றது !

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை. கல்வியில் சிறந்த பொருளில்லை. கல்வியுடையவன் எல்லாம் உடையவன். கல்வி அழகு ஒப்பற்றது. கல்வியற்றவன் எழில் எவ் வகையிலும் பயனற்றது. கற்றறியாதவன் கூறும் சொல்லில் கருத்திருக்க மாட்டாது. கற்றவர் சொல்லில் பொருள் உண்டு, மணம் உண்டு, மாநிலம் மகிழும் அறம் உண்டு. கற்றவர் அறிவு எங்கணும் துலங்கும். எஞ்ஞான்றும் விரியும். கற்றவர் நட்பு பேருவகை செய்யும்.

கல்வி ஒருவர் பால் நிற்றிலது. தம்மை விரும்புபவர் எவர்மாட்டும் அது தங்கும். அதனைக் கற்கக் குலம் வேண்டுவதில்லை. குன்றம் போன்ற நிதி வேண்டுவ தில்லை. குணநலமுடைய சாதியார் என்பதில்லை. குறு நில மன்னர்க்கு அது பொருந்தும் என்பதில்லை. எச் சாதியானும், ஆண்டை முதல் ஆண்டியீறுகக் கற்றுத் தெளியலாம்.

### ஆத்திசூடி இயற்றிய ஔவை

ஆண்டவன் படைப்பில் ஆண், பெண் என்ற இரு குலத்தினரே உண்டு. ஆண் சமுதாயத்துக்குத்தான் கல்வி சொந்தம்; கணிகைகள் கல்வி கற்க வல்லுநர்

அன்று என்பதில்லை. முன் காலம் புலவர் பெருமக்க ளுள் பெண் புலவர்கள் பலர் உண்டு. அவர்கள் கல்வி வளமை ஆண் புலவர்களின் புலமைக்கு எவ்வகையி லும் பிற்பட்டதாக இல்லை. கம்பன், திருவள்ளுவர் வாய்மையை ஒப்ப ஔவையார் வாழ்ந்தார்.

ஔவையின் அறவுரைகள் பசுமரத்திடப்பட்ட ஆணி போன்றது. சுருங்கச் சொல்லி விளங்க வைக் கும் ஆத்திசூடியின் அருங்கருத்துக்கள் ஒன்றே ஔவை யாரின் புலமையை நன்குணர்த்தும். ஔவையாரின் நூல்களைக் கற்போர் அதனைக் கனிரசமெனப் பருகுவர். இருதய கமலத்தில் இக்கருத்துக்கள் உயர் ஞானத்தைப் புகட்டும். தெள்ளத் தெளிந்த தமிழ்ச் சுவையை ஔவை மொழி ஆன்றோர் காலத்திலிருந்து நமக்கு அளித்து வருகிறது.

அவர் காலம் ஒருவகையிலும் முறை பற்றிக் கூற இயலாதெனினும் ஈண்டு அதை உருவகப்படுத்திக் கூறுவோம்.

## ஔவை கலைமகள் திருவுரு

ஔவைப்பிராட்டியார் கலைமகள் திருவுரு என்பது மிகையாகாது. கலாவல்லியின் மறுபிறப்பென அவ் வம்மையை வாயாரப் புகழாத வல்லுநரைக் காண்ப தரிது. இத்திருமகளார் ஆதி, பகவன் என்ற தம்பதிகட் குப் பிறந்த மகவு எனத் தெரிகிறது. பகவனை யாளி தத்தன் என்ற மாற்றுப் பெயராலும் புராணம் கூறும். ஔவையுடன் பிறந்தவர் உப்பை, அதிகமான், உறுவை, கபிலர், வள்ளி, வள்ளுவர் என்பவர் ஆவர்.

## பிறவிக் கவி

பகவன் அந்தணர் குலத்திலுதித்தனனென்பது காணற்படும். ஆதி என்பவள் கீழ்சாதிப் பாவை என்பர். ஆனால் அவர்கள் தம் மணவினையின்போது ஒரு தீர்ப்புக் கொண்டனராம். அங்ஙனம் ஆதி, தனக்குப் பிறக்கும் குழவியை, பிறந்த இடத்திலேயே விட்டு, புருடன் பின் சென்றுவிடவேண்டும் என்பது. அதைக் கோளாக் கொண்டு ஆதி, தன் வயிற்றில் இம்மகவு பிறந்தவுடன், அதைத் தனியே விடுத்துச் செல்லும் துன்பம் தாங்கொணது கண்ணீர்விட்டுக் காய்ந்தனர். அதுகண்ட அச்சிறு குழவி,

"இட்டமுடன் என்றலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னும்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே ஆனாலும் பாரமவ னுக்கன்றோ
நெஞ்சமே அஞ்சாதே நீ."

என்று பாட்டிசைத்துத் திருவருள் கருணையை நினைப்பூட்டித் தம் அன்னைக்கு ஆறுதல் கூறிற்று. இத்திரு மகளார் சொல் கேட்ட ஆதி கண்ணீர் துடைத்துத் தம் பதியைத் தொடர்ந்து கடிவழிச் சென்றாள்.

தனியே விடப்பட்ட அச்சிறு குழவி கானகமிடையே கண் விழித்து, கனலின் சோதிபோல் துலங்கிற்று. பவளச் செவ்வாய் திறந்து பங்கயம் போன்ற பாதங்கள் விசைந்தாட 'அம்மே' என்று அரற்றியது.

## பாணன் இல்லத்தில்

இவ்வோலக் குரல் கேட்ட, அவ்வழிச் சென்ற பாணன் ஒருவன், குரல் வரும் திசை நோக்கிக் கவனித்

தான். ஆண்டு ஒரு பழுமரத்தடியில், பச்சிலைகளைப் பாயலாக விரித்த கிடக்கையிலே மகவு ஒன்று தம் சிறிய அடியின் பெருவிரலைச் சுவைத்து அயர்ந்திருப்பது கண்டான். அம்மகவைக் கண்டவுடன் அப்பாணனுக்கு என்றும் உணர்ந்திராத புத்துணர்ச்சி தோன்றவே, தன்னிரு கரங்களாலும் அக்குழவியை வாரி எடுத்து, உச்சி மோந்து, அதன் அதரங்களில் முத்தமிட்டான். காணற்கரிய கருந்தனம் கிடைத்தது போல், அக்குழவியைத் தம் துகிலில் மறைத்து ஏந்தி, விரைந்து சென்று தம் இல்லாளிடம் கொடுத்தான். காதல் மிகுந்து கருத்தொருமித்த இல் வாழ்வின் சிகரமெனும் அக்கணிகை, நீண்டநாள் பிள்ளைப் பேறின்றி மனம் நைந்திருக்கும் சமயம், தம் கணவன் தமக்காக ஓர் மகவு கொணர்ந்தது பற்றி, உள்ளம் பொங்க, அவள் அச்சிறு குழவியை ஏற்று, கரம் நீள வாங்கிக்கொண்டாள். அக்குழவியின் வதனம் கண்ட பாடினி மெய் சிலிர்த்தது. அவள் கருமணியினின்று ஆனந்தக் கண்ணீர் மல்கிற்று. தம்மையும் அறியாமல் மார்பில் பால் சுரந்தது.

இவ்வாறு பாணனும் பாடினியும் அச்சிறு மகவை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். அம் மகவு குழவிப்பருவம் நீங்கி ஐயராட்டைப் பருவம் அடைந்தது.

பாணன் தம் மகளுக்கு அரிய கல்வி புகட்ட கருத்துக் கொண்டான். ஆனால் அம்மகவு தம் குலத் தொழிலுக்கு ஏற்ப, கல்வியில் பிறர் பணியின்றித் தாமே கல்வி பயில்வதாயிற்று. பாணர் குலம் கல்வி வளம்

கொண்டது, எனவே "கல்லாமல் கல்வி படும்" பேறு அம்மகவுக்குச் சுரந்தது போலும். அன்றியும் அச் செல்வி கலைமகள் ஆசி பெற்றவளாதலின், அவள் கற்கும் கல்வியனைத்தும், முன்னம் கற்று அதை நினைப் பூட்டிக் கொள்வது போற்றோன்றியது. இங்ஙனம் அச்செல்வி பாணர் குலத் தொழிலுக்கு ஏற்ப ஆடல் பாடல் முதலியவற்றிலும் முற்றுணர்வு கொண்டாள்.

சில ஆண்டுகளில் இச்செல்வி மங்கைப் பருவமடைந்தனள். அது கண்ட பாணன், இச்செல்விக்கு அழகிய மணாளன் தேட முனைந்தான். இல்வாழ்வின் சுகத்தில் தம் மகள் மிதந்து, சுகவாழ்வு வாழ வேண்டுமென்பது அவன் விருப்பம். ஆனால் இக்குமரியின் நினைவு முற்றிலும் முரண்பட்டிருந்தது. உலக வாழ்வு தமக்கு விருப்பமற்றதை அவள் பாடினிக்குப் பன்முறை புலப்படுத்தியதுண்டு. ஆயினும் பெற்றோர் உறுதி அச்செல்வியைப் பரதவிக்கச் செய்தது.

## தலைமேல் துகில் போர்த்து

ஒரு சமயம் பாணன் தக்க வரன் பேசி, மணமகன் கேளிர், அத்தையலரைக் காண வந்திருந்தனர். எனவே அக்குமரிக்கு ஆயது பூட்டி அலங்கரித்து, அவரெதிரில் அமரச் செய்தனர். ஆனால் அக்கலைக் குமரி அவையனைத்தும் களைந்து, கிழிந்த துண்டொன்று உடுத்தி, தலைமேற் துகில் போர்த்து, நீண்ட கழியொன்று கையிலேந்தி, பூமியை நோக்கி நின்றாள். இதைக் கண்ட மணமகன் உறவினர் மறுகணம் பறந்தோடிவிட்டனர். பாணன் தம் முயற்சி வெற்றி பெற வகையின்றி, அவ்வம்மையைத் தம் கருத்துப்படி விட்டுவிட்டனன்.

அது முதல் அக்குமரி பருவநிலை மறந்து முதுமைக் கோலத்துடன் தோன்றினள். மூப்பு முனைந்த முதுமைக் கோலத்தை முற்றிலும் அவாவிய அவ்வம்மையைக் கண்ணுற்ற அனைவரும் அவரைத் தாய் எனவே கருதலாயினர். அது முதற் தாய் என்று பொருள்படும் ஔவை என்ற பெயர் அவருக்கு வழங்கலாயிற்று.

## துறவிக் கோலம்

நந்தமிழ் மொழியை அமிழ்தெனக் கருதி, நாவில் நற்சுவை மிகுந்த கவிப் பெருக்கெடுத்து நின்ற ஔவையை அவர் புலமை கண்டு அனைவரும் புகழ்ந்தனர். முடியுடை மூவேந்தரும் அவர் வரவு நோக்கி விழைந்தனர். பாவலரும் நாவலரும் ஔவையைத் தம் தம் இல்லம் வரவேற்று உபசரிக்கலாயினர். எனவே ஔவை எங்ஙனும் ஓர் இடத்தில் பொருந்தியின்றி, மனதுக்குகந்த நாடு பல சென்று, துறவிபோல் காலங்கழிக்கலாயினர். ஔவை புலமை இவ்வாறு யாண்டும் நீண்டது.

## நெடுமானஞ்சியின் நட்பு

ஔவையார் காலத்தில் சேர மண்டலத்தை அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவன் தகடூரைத் தலைநகரமாகக்கொண்டு அரசாண்டு வந்தான். நெடுமான் அஞ்சி கொடையின் சிகரம் போன்றவன். புலவர் பால் பேரன்புள்ள இவ்வரசனை ஔவையார் அண்மினர். அதியமான் சிறப்பைக் கேட்டுணர்ந்த ஔவை அவர்பால் தக்க பரிசில் பெறவே அங்ஙனம் வந்தது. அதியமான் தமிழ் நல்லி

சைப் புலமை கொண்ட ஔவையை நன்கு பரிசளித்து மனமகிழ்விக்க நினைத்தான். அவருக்கு வேண்டிய பரிசில் நல்க மனமிருந்தும், ஒருக்கால் அதைக் கொடுத்து விடில், அப்பிராட்டியைப் பிரிய நேரிடும் என்ற உள்ளக்கிடக்கையைப்பற்றி அதைக் கொடாமல் காலங் கடத்தி வந்தான். ஆனால் ஔவை தமக்குத் தர இருந்த பரிசிலைத் தாராது போன விதத்தைத் தப்பாக எண்ணி விட்டனர்.

எனவே அவனிடம் நேரிற் செல்ல விருப்பமின்றி தாம் அரசர்பால் கொண்டுள்ள அருவருப்பை காவற் சேவகன் மூலம் விடுத்து, தம்மூர் திரும்ப அநுமதி வினவினள். இது கண்ட அதியமான் ஔவையின் வெகுளியைக் கண்டு அஞ்சினன். தாம் பரிசில் தாராமல் காலம் கடத்திவந்த உண்மையை ஔவைக்கு விரைந்து கூறினன். அது கேட்டு ஔவை அதியமான் பேரன்பை உன்னி மகிழ்ந்தாள்.

## அதியமான் அளித்த அருங்கனி

ஒரு சமயம் அதியமான் அருங்கானில் ஒரு மலைப் பக்கம் சென்றிருந்தபோது, அவனுக்கு ஓர் கருநெல்லிக் கனி கிடைத்தது. அக்கனியை உண்பவர் நீண்ட நாள் உயிர் வாழ்வர் என்ற விவரம் அறிந்த அதியமான் அக்கனியை சேமித்து வைத்திருந்தான். அதன் பயன் அதியமான் நன்குணர்வான். ஆனால் புலமை நிறைந்த ஔவையாரைக் கண்டது முதல் அவன் கருத்து வேறு பட்டது. அக்கனியை ஔவை உண்டு வெகுநாள் உயிர் வாழ்ந்து தமிழ்ப்பணியாற்ற வேண்டும் என்ற தீர்ப்புக்

கொண்டான். எனவே அக்கனியை அவருக்கு உண்ண நல்கினன். என்னே! அதியமான் ஔவையிடம் கொண்ட பேரன்பு.

## பாரி கொடுத்த பரிசில்

இங்ஙனம் ஔவைப்பிராட்டியைத் தம் இல்லத்தில் வந்து உண்டு இன்னுரையாட அவாவிய கல்விச் செல்வர் பலர், அவரை விழைந்து அழைத்தனர். குறுநில மன்னர் அவர் பாடல் கேட்க விரும்பினர். எனவே ஔவையார் மனம் குளிர, ஆங்காங்கு சென்று வந்தார். ஔவை ஓரிடத்திலேனும் பொருந்தியிருந்ததில்லை. மனம் சென்றபடி திரிந்து வாழும் நிலையே அவருக்கு இசைவு கொண்டது. தமிழகத்திலே பல மன்னரிடம் சென்று ஆண்டுக் கிடைக்கும் பரிசில்களையும் பெற்று வருங்கால், பரம்புமலை மன்னன் பாரியின் அரண்மனைக்குச் சென்றார். அவர் வரையாது கொடுக்கும் வள்ளல். புலவரின் பெருமையை நன்குணர்ந்த தயாளன். அவர் ஔவையை நல்வரவேற்று மகிழ்ந்து தம்பாற் சின்னாட்கள் வைத்திருந்து சிவிகை ஏற்றி ஊர்வலம் வந்து சிறப்பித்தான். ஔவை தமிழ்ப் புலமை கண்ட பாரி அவரை விட்டுப் பிரிய மனம் கொள்ளவில்லை. ஒரு சமயம் ஔவை பாரி மன்னனிடம் தக்க பரிசில் பெற்று தம் வழி நடந்தார். இது கண்ட பாரி அவர் பிரிவு பொறாது, அவருக்குத் தந்த பொருளைப் பறித்து வருக என்று தம் ஆட்களை ஏவினர். அங்ஙனமே அவர் பரிசில்கள் பறிக்கப்பட்டது கண்டு ஔவை மீண்டும் பாரியிடம் வந்து சின்னாட்கள் தங்கி இருந்தார். என்னே! பாரி ஔவையிடம் கொண்ட அன்புப் பெருக்கு.

## காரி கொடுத்த களக்கொட்டு

ஒரு சமயம் ஔவை பாண்டிய நாட்டில் காரி என்னும் வேளாளரிடம் விருந்தினராகச் சென்றிருந்தனள். அங்கு சின்னாட்கள் தங்கிப் பின்னர் தம் ஊர் திரும்ப நினைத்தபோது, காரி அவரை விட்டுப் பிரிய மனம் இன்றித் தம்மிடமிருந்த களக்கொட்டினை ஔவையிடம் தந்து "அம்மையே! இதைக்கொண்டு இந்நிலத்தை அளப்பாயாக" என ஒரு சிறு நிலத்தைக் காட்டி மறைந்தனர். ஆனால் சொன்ன சொற்படி பாரி திரும்பி வராமற் போனது கண்டார் ஔவை. பொழுதும் சாய்ந்துவிட்டது. கதிரவன் மறைந்தான். காரி ஔவையிடம் மாலையில் திரும்ப வந்து தாம் வேண்டுமென்றே செய்த இத்தந்திரத்தைக் கூறி, அவரைப் பிரிய மனமற்ற தம் தடுமாற்றத்தைக் கூறினன். இதனை உணர்ந்த அம்மை, பாரி தம்மிடம் கொண்ட முதிர்ந்த அன்பு கண்டு பெருமிதம் கொண்டார்.

## சேரமான் கொண்ட பேரன்பு

ஒரு சமயம் ஔவையார் சேரமான் மா வெண்கோ என்ற தகடூர் மன்னனைக் காணச் சென்றனர். அச்சமயம் அங்கு ஒரு பெரிய விருந்து நடந்தது. அவ்விருந்துக்குக் குறுநில மன்னர்கள், பாவலர், நாவலர் முதலிய பலர் வந்திருந்தனர். அவர்களிடை ஔவையும் ஒருபுறம் அமர்ந்திருந்தார். சேரமான் அனைவரையும் ஒப்புடன் உபசரித்து மகிழ்ந்திருந்தபோது அவருள் ஒருவருக்கு அமர இடமின்றித் தவிக்க நேர்ந்தது. ஆகவே உட்கார்ந்திருந்த ஒருவர் இடம் விட்டு அவருக்கு இடம்

கொடுக்க வேண்டியதாயிற்று. சேரமான் யாரை எழுப் பலாம் என்ற ஐயப்பாடு கொண்டிருந்த நிலையில், அவ ருக்கு ஔவையிடம் தாம் கொண்டிருந்த தோழ மையை நினைவு கொண்டார். உடனே அவர் அவரைத் தம்மிடத்தே அழைத்து அமர்த்திக்கொண்டு, அந்த இடத்தை வந்தவருக்குக் கொடுத்தார். இதனால் சேர மான் ஔவைப்பிராட்டியிடம் கொண்டிருந்த பேரன்பு நன்கு துலங்கும்.

## பாரி மகளிர் திருமணம்

பரம்பு நாட்டு அரசன் பாரி. அந்நாடு கொடைத் திறமும் பெரும் புகழும் கொண்டது. அதைக்கண்டு மனம் நைந்த பிறநாட்டு மன்னர் எங்ஙனமாயினும் அவருக்கு ஊறு செய்யச் சூழ்ச்சி செய்து, முடிவில் அவரைக் கொலைசெய்து விட்டனர். எனவே பாரியின் அருமருந்தன்ன மகளிர் அங்கவை, சங்கவை என்னும் மங்கையர் நீண்ட நாள் மணப்பாரற்றுக் கிடந்தனர். பாரியின்பால் கொண்ட ஐயுறு காரணமாக, அதிரூப சுந்தரிகளான இவ்விருமங்கையரை எவரும் மணக்க இசைந்தாரில்லை. ஏனையோர் ஒருக்கால் தாம் அவளை மணப்பதால் பாரி வைரிகள் தம்மையும் எய்தல் பெறுமோ என அஞ்சி மறுத்தனர். பாரியின் மகளிர் துன்பங் கண்ட ஔவை, தம் நட்புக் கடன் கழிக்க எண்ணி விச்சிகோ, இருங்கோ என்ற மன்னரிடமும் சென்று அவரை மணம் புரிய வேண்டினர். ஆனால் அவர்களும் மறுத்து விட்டனர். பின்னர் ஔவையார் அப்பாவைகளை பார்ப்பனருக்கு மணமுடித்து வைத் தனர்.

## பனை ஓலை காய்த்தது

ஔவை இந்திருமணத்தின்போது, முடிசூடிய மூவேந்தர் அனைவருக்கும் ஓலை அனுப்பி வந்திருக்கச் செய்தனர். ஆண்டு விருந்துண்ணும் குறுநிலமன்னர்களை நோக்கி ஔவைப்பிராட்டி "நீங்கள் அனைவரும் எம்பொருட்டு இங்கு வந்து எம்மை கௌரவித்தமைக்கு என் மகிழ்ச்சி. நான் இடும் இவ்வுணவு உண்டு நீங்கள் களிப்பதாக" என்று நல்வரவேற்றார். அது கேட்ட மன்னர் ஒருவர் பிராட்டியை நோக்கி 'எங்களுக்குப் பனம்பழம் மிகவும் விருப்பம். அக்கனி தாங்கள் நல்குதி' என்றனர். ஆனால் பனம்பழம் கிடைக்கும் பருவம் அதுவன்று. பருவகாலத்தன்றிப் பழம் கிடைத்தலரிது. ஔவை செய்வதறியாது திருவருளை நினைத்துத் தம் அண்மையிலிருந்த பனை ஓலைத் துண்டொன்றை பூமியில் நட்டு,

"திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் றார்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே"

எனப் பாடினார்.

உடனே அவ்வோலை வெண்குருத்துவிட்டு விளைத்தவாறு பனங்கனிகள் பயந்தன. அக்கனிகளை ஔவையார் மூவேந்தருக்கும் அளித்தார். அதுகண்ட அம்

மன்னர்கள் ஔவையின் திருவாக்கைக்கண்டு வியப் படைந்தனர். பின்னர் அவர் அனைவரும் மகிழ பெண்ணை நதியை நோக்கிப் பாலும் நெய்யும் பெய்து நிற்க,

“முத்தெறியும் பெண்ணை முதுநீர் அதுதவிர்த்து
தத்திவரு நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத்தெய் வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டோடி வா”

எனப் பாடி மகிழ்வித்தார்.

## அழியா வாழை : ஒழியாக் கிணறு

‘பொன்னுக்குப் பாடினன் கம்பன், கூழுக்குப் பாடினள் ஔவை’ என்பது ஒரு சிறு வாசகம். ஔவை ஒரு சமயம் திருவண்ணாமலையைச் சார்ந்த புல்வேளூர் என்ற பதி சென்றிருந்தார். அந்த ஊரில் பூதன் என்பவன் அவருக்கு ஒரு நல் விருந்தளித்தான். அவன் அளித்தது வரகரிசியாகிலும் அது இடப்பட்ட அன்பு கண்ட ஔவை, அவனை ஆசி கூறி, அவன் வயற்புரத்துக் கிணற்றின் ஊற்றுநீர் தானே ஏறிப்பாய விரும்பினர். அதன்படி அவன் வாழைத்தோட்டம் என்றும் அழியாதிருக்க அக்கிணறு என்றும் ஒழியாது நீர் தந்து வந்தது.

## இல்லை என்பதும் நாளை என்பதும் ஒன்றே

ஒரு சமயம் ஔவை தமக்கு ஆடு வேண்டுமென வாதவன், வந்தவன், யாதவன் என்ற மூவரை அண்டிக் கேட்டாள். அவருள் முதல் இருவர் நாளை என்று தட்டிக் கழித்துவிட்டனர். ஆனல் மற்றவன் இல்லை

என்பதை திட்டமாகக் கூறிவிட்டான். மற்ற இரு வரினும் பின்னவன் சொன்ன விடை நல்லதே எனப் பொருள்பட ஔவை ஒரு பாடல் பாடி உள்ளார். அந்தப் பாடல் பின்வருமாறு.

" வாதவர் கோன் பின்னை யென்றான் : வந்தவர் கோன்
நாளை யென்றான்
யாதவர் கோன் யாதொன்றுமில்லை யென்றான்—
ஆதலின்
வாதவர் கோன் பின்னையினும் வந்தவர் கோன்
நாளையினும்
யாதவர் கோன் இல்லை யினிது "

## சேரா ! உன்னாடு பொன்னாடு

ஆனால் அவர் வேண்டுதல் தெரிந்த சேரமான் அவர் விருப்பம் நிறைவேற்றத் துணிந்தான். ஆயினும் உயிர் ஆடு தருதல் தகாதெனஉன்னி, ஒரு பொன் ஆடு ஔவைக்குக் கொடுத்தான்.

அவன் பேருவகை கண்ட ஔவை இருபொருள் படுமாறு "சேரா உன்னாடு பொன்னாடு" எனப் போற்றினார். இந்த ஆசியைப் பெற்ற சேரநாடு பொன் நாடு எனவே திகழ்ந்தது.

## கல்லாத கயவனைக் கற்றோய் என்றேன்

ஒரு சமயம் ஔவை ஈகைக் குணமற்ற ஒரு கயவனை அணுகி, தமக்குப் பரிசில் விரும்பினார். அவன் ஔவையைப் புறக்கணித்து யாதொன்றும் தாராமல் போயினான். மனம் குன்றிய ஔவை அவன் கீழ்மைக்

குணத்தைக் கண்டு வருந்தினார். உலோபியை அவர் உகந்து பாடியது தம் குற்றம் என உணர்ந்து,

“ கல்லாத ஒருவனை நான் கற்றாயென்றேன்
காடேறித் திரிவானை நாடா என்றேன்
பொல்லாத ஒருவனை நான் நல்லாய் என்றேன்
போர்முகத்துக் கோழையை நான் புலி ஏறு என்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூம்பற்றோளை,
வழங்காத கையனை நான் வள்ள லென்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லை யென்றான்
யானு மென்றன் குற்றத்தா லேகின்றேனே ”

என்று தம் குற்றம் உணர்ந்து பாடினார்.

## ஔவை சென்ற தூது

அதியமான் நெடுமானஞ்சி ஔவையிடம் கொண்டிருந்த நட்பு அளவிறந்தது. அவருக்காக ஔவை ஓர் சமயம் தூது சென்ற விவரமும் நமக்குக் கிடைக்கும்.

ஒரு சமயம் அதியமான் நெடுமானஞ்சியை இரும்பொறை என்ற மன்னன் போரில் எதிர்த்தான். அவன் தோள் வலிமையும் மாற்றார் வலிமையும் ஒப்பக் கூறுதல் மலையையும் மடுவையும் காணற்போன்றது. தம் வலிமை உணராமல் தம்மிடம் பொருது மாள முன் வந்த இரும்பொறையின் அறியாமையைக் கண்ட அதியமான், உண்மையில் தம வைரி தம் வன்மை தெரிந்துகொள்ளவேண்டும் எனக் கருதினார். எனவே தக்க தூதுவர் மூலம் தம் படைப்பலத்தை அவனுக்கு அறிவிக்க எண்ணி, அப்பணிக்கு ஔவை ஏற்றவர் எனத்தேர்வுற்று, அவரைத் தூது அனுப்பினார். ஔவை இரும்பொறைத்தலைநகரமான கோவலூரை அண்மினர்.

பெரும் சேரல் இரும்பொறை ஔவைக்குத் தம் படை வீட்டைத் திறந்து காட்டிக் கூரிய தம் போர்க் கருவிகளின் வன்மையைப் புலப்படுத்தினன். தமது படைக் கருவியை மிஞ்சி எம்மன்னரும் வெற்றி பெற முடியாது என்று தன்னைத் தானே புகழ்ந்து கொண்டான். இதுகேட்ட ஔவை அவன் செருக்கை அடக்க நினைத்து "மன்ன! உன்னுடைய படை இல்லத்தில் படைக்கலங்கள் நெய் தடவப்பட்டு அழகாக மாலை மரியாதைகளுடன் தயாராக வைக்கப்பட்டுள்ளது உண்மையே. ஆனால் அதியமான் படைக்கலங்களோ வைரியை வாகைசூட்டி ஓய்ந்ததால் தற்காலம் கொல்லன் உலைக்களத்தில் நுனிமுறிந்து பதப்பட்டுக் கொண்டிருக்கின்றன" என இருபொருள்படக் கூறினார். இதன் உண்மைப் பொருள் அறிந்த இரும்பொறை செருக்கு அடங்கினான்.

அதியமான் காலகதியானபோது ஔவை அடைந்த துன்பம் சொல்லொணாது. அப்போது அவர் அதியமான் நடுகல்லுக்கு மாலைசூட்டி, கண்ணீர்உகுத்து அவர் பூத உடல் அன்று அழிந்தாலும், அவர் புகழுடம்பு என்றும் அழிவதில்லை என்று வாழ்த்தினர்.

## சக்களத்தி வாது : பலாமரம்

ஒரு சமயம் ஔவை ஓர் சிற்றூரை அடைந்தார். அவ்வூரில் ஓர் குறவன் இரு மனைவியுடன் வாழ்ந்து வந்தான். அவர்களுள் மூத்தவளைவிட இளையவளிடமே குறவனுக்குப் பிரியம் அதிகம். ஆகவே இவ்விரு மங்கையர்களிடையே என்றும் பூசல் மலிந்து கிடந்தது.

ஒரு சமயம் குறவன் வேற்றூர் செல்ல நேர்ந்தது. அப்போது அவன் வெகு கனிவுடன் நீர் ஊற்றி வளர்த்து வந்த பலாமரத்தை நன்கு கவனித்துக்கொள்ளும்படி தம் இரு மனைவியரிடமும் கூறிச் சென்றான்.

இளையாளுக்கு இது தக்க சமயம் எனத் தோன்றியது. அவள் அப்பலாமரத்தை தன் ஆட்கள் மூலம் வஞ்சகமாக வெட்டிவிட்டு, குறவன் திரும்பியபோது மரத்தை மூத்தவள் வெட்டிவிட்டாள் என்று பழி கூறிவிட்டாள். இவ்வடா நிந்தையினின்று மீள வகையற்ற மூத்தவள், திருவருள் வழுத்தி நின்றாள். அச்சமயம் ஔவை அவ்வழியாகச் செல்ல நேர்ந்தது. அருள் வடிவமான ஔவையைக் கண்ட மூத்தவள், தாயைக் கண்ட சேயைப்போல் தன் குறை கூறிக் கண்ணீர் உகுத்தாள். உண்மை உணர்ந்த அம்மூதாட்டியார் திருவருளை நினைத்துப் பாட்டொன்று இசைத்து, அம்மரம் முன்போல் தழைக்க ஆணையிட்டாள். அங்ஙனமே வெட்டுண்ட பலாமரம் தழைத்துக் கவையாகிக் கொம்பாகி நின்றது.

## ஆடிப் பழ முறத்தால் சாடினள்: எனவே கூறாமல் சந்நியாசம் கொள்

ஒரு சமயம் ஔவை ஏழைக் குடிமகன் ஒருவனைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது அம்மைக்குப் பசி அதிகம். தமக்குச் சோறு படைக்க அவர் அக்குடிமகனை வேண்டிக்கொண்டார்.

அக்குடிமகன் தருமவான். பிறர் பசித்திருக்க உண்ணமாட்டான். அவன் மனைவியாக வாய்த்த மங்கை

முற்றிலும் முரண்கொண்ட நெஞ்சம் கொண்டவள்; அடங்காப்பிடாரி; எச்சிற் கையாலும் காக்கை ஓட்ட மாட்டாள். எனினும் அவள் விருப்பம் பெற்ற பின்பே அவன் விருந்தினர்க்கு விருந்திட முடியும். எனவே அவளிடம் மெல்லச் சென்று, முகம் மலர்த்தி வாய் குழற, தம் மனக்கிடக்கையை அக்குடிமகன் கூறினன். இது கேட்ட அப் பேய்மகள் "ஆகா! உனக்கு இவ்வளவு ஆணவமா!" என்று ஆடினள், பாடினள், பழமுறத்தால் சாடினள். ஆயினும் இக்கொடுமைகளை ஏற்றுக்கொண்டு, எப்படியும் ஔவைக்கு அமுதூட்ட நினைவு கொண்ட அக்குடிமகன் தம் மனைவியின் விருப்புப்பெற்று, அவருக்கு இலையில் சோறிட்டு நெய் பெய்தனன்.

## காணக் கண் கூசுதே

அம்மை தெய்வத் திருவாக்குக் கொண்டவள். உள்ளது காட்டும் பளிங்கு போல் முகம் என்ற உண்மை உணர்ந்தவள். எனவே அப்பேய் மகள் குண மறிந்து,

> "காணக்கண் கூசுதே! கையெடுக்க நாணுதே!
> மாணொக்க வாய்திறக்க மாட்டாதே! வீணுக்கென்
> என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ!
> அன்பில்லாள் இட்ட அமுது"

எனக்கூறி குடிமகன் மனத் தூய்மை குணம் பற்றி அன்னை கை நனைத்து எழுந்தாள். ஆனல் அக்குடிமகன்

தம் இடுக்கண்தீர விடுதலையை விரும்பினன். அப்போது ஔவை,

“ பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானல்
எத்தாலும் கூடி இருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா ருகஇருப் பாளேயா மாயின்
கூருமல் சந்நியாசம் கொள்”

என்று பாடினள்.

## நான் தோற்றேன்

ஔவை சொல் நயத்தில் முருகவேளுக்கும் விருப்பம் ஏற்பட்டது போலும்! ஒரு சமயம் ஔவை ஒரு கானகம் மூலம் தம் வழிச் சென்றிருக்கும்போது, சிவகுமரன் ஆடு மேய்க்கும் சிறுவன் போல் நாவல் மரத்தில் குறுகிய கிளேயில் அமர்ந்திருந்தார். கார் காலமாதலின் நாவல் மரத்தில் அருங்கனிகள் மலிந்துகிடந்தன. சிறுவன் அதைப் பறித்துக்கொண்டு இருந்தான். நாவற் கனிகளின் நல்ல ருசி தெரிந்த ஔவையார் அச்சிறுவனே நண்ணி “சிறுவ! எனக்கும் சில கனிகள் பறித்துப் போடுக” என்ருர்.

சிறுவனுக்குத் தக்க வாய்ப்புக் கிடைத்தது. உடனே அவர் இரு பொருள் நயம்கொண்டு “பாட்டீ, நாவற்பழங்கள் வேண்டும்படி பறித்துப் போடுகிறேன். ஆனல் உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?” என்ருர். ஔவைக்கு அதன் பொருள் எளிதில் விளங்கவில்லை. ஆயினும் சிறுவன் மூலம் அதன் பொருள் தெளிய ஆவல் கொண்டு நுட்ப மதியுடன் ஔவையார் “ சிறுவனே ! சுட்ட பழம் சில

தேவை'' என்றார். உடனே சிறுவன் நன்கு கனிந்த நாவற் பழங்கள் சிலவற்றை உலுக்கினான்.

அக்கனிகள் கீழே விழுந்து புதைந்து, மண் ஒட்டிக் கொண்டது. ஔவை அதை எடுத்து அதிலுள்ள மண்ணை ஊதிக் கனியை வாயிலிட்டாள். இதைக் கண்ட சிறுவன் புன்முறுவல் பூத்து ''பாட்டி! என்ன? பழம் சுடுகிறதா? ஊத வேண்டுமா?'' எனக் கேட்டார். அச்சிறுவனின் நலம் மிக்க வினாவின் பொருள் உணர்ந்த ஔவை ஒரு கணம் திகைத்தாள்.

''சுட்ட பழம்: சுடாத பழம்'' என்பதன் உட்பொருள் முதலில் உணராமல் ஔவை தாம் பெற்ற தோல்வி கண்டு,

'' கருங்காலிக் கட்டைக்கு நாணாக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற் றது
ஈரிரவு துஞ்சாதென் கண்.''

எனப்பாடி வருந்தினாள்.

இதைக்கேட்ட சிறுவன் மகிழ்ந்து, தம் உண்மைச் சோதியை ஔவைக்குக் காட்டி அருள் புரிந்தார்.

## உலகில் பெரியது எது? அரியது எது? கொடியது எது? இனியது எது?

ஆனால் அவர் அத்துடன் விட்டபாடில்லை. ஐயன் ஔவையை தமது ஐயப்பாடுகள் சிலவற்றையும் தீர்க்க விரும்பினார். அவர் ஔவையை நோக்கி ''உலகில்

பெரியது எது? அரியது எது? கொடியது எது? இனியது எது?'' என்று வினவினர். முருகப்பெருமானின் இக் கேள்விகட்கு விடை பகருதல் எளிதன்று.

ஆனால் இதற்குப் பின் வாங்குபவள் ஔவை யன்று. எனவே அவர் கூறிய பதில் பின் வருமாறு: ''உலகில் அனைத்தையும்விட இப்பூமி மிகவும் பெரி யது. அப்புவியை பிரமன் படைத்தான். இப்பிரமன் நீலமேக நிறம் கொண்ட விஷ்ணுவின் உந்தியில் உதித்தவன். விஷ்ணு அலைகடலில் துயின்றவன். அலை கடல் அகத்தியன் கையில் அடங்கிற்று. இக்குறு முனியோ கலயத்தில் பிறந்தான். இக்கலயம் பூமி யினடியில் பிறந்தது. மண்ணினாற் செய்தது. இப் பூமியைச் சுமந்து நிற்பது படம் விரித்த அரவு. அரவு அம்மை பார்வதியின் கை ஆழி. இப் பார்வதி எல்லாம் அறிந்த பரமசிவன் அர்த்தநாரி. அர்த்தநாரி பக்தன் இதயத்தில் அமர்ந்தவன். எனவே பக்தன் இதயத்தை ஒப்பப் பெரியது எது என்று கூற இயலும்?''

''அன்பர் பெருமானே! நீர் அரியது எது என்று கேட்ட கேள்விக்கு என் விடை கேண்மின்! எல்லாப் பிறவியைவிட மானிடராய்ப் பிறத்தல் அரிது! அதிலும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் மிக அரிது! அதிலும் ஞானமும் கல்வியும் கொண்ட மகனா கப் பிறப்பது அரிது. கல்வியறிவு கொண்டிருப்பினும் தருமகுணமும் அறநெறி வாழ்க்கையும் கொண்ட மகனாக வாழ்தல் மிக அரிது.''

"அன்பின் திருவுரு எனும் ஆறுமுகப் பெருமானே கேண்மின்! உலகில் வறுமையை விடக் கொடியது வேறு இல்லை. வறுமை மக்கள் இள்மைப் பருவத்தில் மிகவும் கொடியது. அதைவிடத் தாங்க முடியாத் துன்பம் மிகவும் கொடிது. இக்கொடுமையைவிட அன்பற்ற பெண்டிர் நட்பு மிகவும் கொடிது. அதனினும் கொடியது அவரிடும் அமுதுண்பது."

"ஈராறு கை பெற்ற எழில் வேந்தே! சொல்வது கேளீர்! ஏகாந்த வாழ்க்கை மிகவும் இனிது. ஏகாந்தத்தில் ஆதியைத் தொழுதல் இனியது. அதிலும் இனியது அறிவுடைப் பெருமக்கள் நட்பு. அதிலும் அந்த அறிவுப் பெருக்கம் உள்ளாரை அல்லும் பகலும் காண்பது மிக இனியது" என்றார். இது கேட்ட பெருமான் ஔவையின் அறிவுத்திறம் மெச்சி வாழ்த்தி மறைந்தார்.

## நான்கு கோடிப் பாடல்கள்

ஒரு சமயம் சோழ மன்னன் தம் அவையில் வீற்றிருந்த பொழுது புலவர் பெருமக்களை நோக்கி "நீவிர் நாளை வைகைறைப் பொழுதுக்குள் நான்கு கோடிப் பாக்களைப் பாடி வருவீராக" என உத்தரவிட்டான். இதைக் கேட்ட நாவலர் செய்வதறியாமல் "ஒரு பொழுதில் நான்கு கோடிப் பாடல்கள் எங்ஙனம் பாட இயலும்" என மலைத்துத் துயருற்றனர். அச்சமயம் அவ்வழிச் சென்ற ஔவைப் பிராட்டி அவர்கட்கு ஆறுதல் கூறி "அன்பர்களே! இதற்கோ

நீங்கள் வருந்துவது ! இதோ நாம் பாடித் தருகிறோம்'' என்ன,

(1) '' மதியாதார்முற்றம் மதித்தொரு காற்சென்று
மிதியாமை கோடி பெறும்.''

(2) '' உண்ணீருண்ணீரென்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்.''

(3) '' கோடிகொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்.''

(4) '' கோடானுகோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்.''

என்று பாடிக் கொடுத்தார். இதைப் பெற்ற புலவர் குழாம் அதை மன்னரிடம் சேர்ப்பித்தனர். மன்னன் அப்பாடல்களின் பொருள் உணர்ந்து அகமகிழ்ந்தான். ஏனையப் பாவலரும் ஔவையார் பொன்னடியை வணங்கிப் பூரித்தார்கள்.

## அசதிக் கோவை

ஒரு கால் ஔவை பாண்டிய நாட்டில் முல்லைப் பரப்பிலே வழி நடக்கும்போது பசிப்பிணி அவரைத் துன்புறுத்தியது. அச்சமயம் இடையன் ஒருவன் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்ட ஔவை தம் பசி நோய் கூறி தமக்குக் கூழாகிலும் தரும்படி வேண்டினர். ஔவையின் மிடிநோய் அறிந்த இடையன் தம் கலயத்திலிருந்த கூழை அளித்து உபசரித்தான். இக்கூழை உண்டு மகிழ்ந்த ஔவை அவன் பெயரைத் தம் நூலில் பொறிக்க எண்ணி, அவன் பெயர் வினவினள்.

இடையன் நாடறியாத அறிவிலி. தம் பெயர் அவனுக்கு ஞாபகமில்லை, தமது ஊர்ப் பெயரும் அறிந்திலன். ஆனால் தன் ஊரில் ஐந்து வேல மரங்கள் உண்டென்று கூறினான். எனவே ஔவை இடையன் அசதிக்குப் பெரிதும் வருந்தி, அவன் ஊரின் ஐந்து வேல மரங்களை நினைவுகொண்டு அவனை ஐவேல் என்ற பெயரால், அசதிக் கோவை என்ற ஓர் அரிய நூல் இயற்றினாள். இந்த நூல் மிகவும் தொன்மை வாய்ந்தது. மிகவும் இனிமையான காவியம். இதன் இலக்கியங்களை முற்றும் உணர்ந்த புலவர்கள் அதன் மெய்ப்பொருள் கண்டு மகிழ்வர்.

## அரைப் பாட்டுக்கு ஐந்நூறு பொன் வாங்கினான் கம்பன்

ஔவை ஒரு வாய் கூழுக்காகப் பாடும் எளிமையை இன்னொரு சிறு கதையாலும் அறியலாம்.

கோயில் கணிகை ஒருத்தி, கம்பரை அண்மி தம் மீது ஒரு பாட்டுப் பாடும்படி வேண்டிக் கொண்டாள். ஆனால் கம்பர் "ஆயிரம் பொன் கொடுத்தால்தான் ஒரு பாட்டுப் பாடமுடியும்" என்று கூறிவிட்டார். அப்போது அம்மாது வைத்திருந்தது ஐந்நூறு பொன். அதை அவள் கம்பரிடம் கொடுத்து தம்மீது ஆசி கூறி பாடல் செய்ய வேண்டிக் கொண்டாள். இதைப் பெற்றுக்கொண்ட கம்பர்,

" தண்ணீரும் காவிரியே ; தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே"

என்ற அரைப் பாட்டுப் பாடிவிட்டு, அவள் வீட்டுத் தெருச் சுவரில் அதை எழுதித் தன் வழிச் சென்றார்.

இதுகண்ட அப்பெண் தம் கையிலிருந்த ஐந்நூறு பொன் கொடுத்தும், முற்றுப் பெருத பாடல் குறித்து வருந்திக் கிடந்தனள். பின்னர் ஒரு சமயம் ஔவை அவ்வழிச் செல்வதை அம்மங்கை உணர்ந்து, அவரிடம் கம்பர் அரைப் பாட்டின் விவரம் கூறி, அப் பாடலை முடித்துத் தர வேண்டினுள். ஔவைக்கு அச் சமயம் பசி அதிகம். எனவே அக்கணிகை தந்த கூழை வயிருரப் பருகி சிவகளை கொண்டு அப்பாட்டின் பிற் பகுதியை,

" பெண்ணவாள்
அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு "

என்று முடித்துக் கொடுத்தார். ஔவை ஆசிப்படி கணிகைக்கு செம்பொற் சிலம்பு கிடைத்து செல்வம் பொங்கி சுக வாழ்வு கிடைத்தது. பின்னர் ஒரு சமயம் கம்பனுக்கு இது தெரிந்தது. தாம் வேண்டுமென்றே பாதியில் நிறுத்திவைத்த பாட்டை, ஔவை எளிதில் முடித்துக் கொடுத்துவிட்டது கண்டு அவர்மீது சீற்றம் கொண்டு தக்க சமயத்தில் ஔவையை அவமானப் படுத்த நினைத்தார். பின்னர் ஒரு சமயம் கம்பர் ஔவையாரைக் காண நேர்ந்த போது,

" ஒருகால் நாலிலைப் பந்தலடி "

எனக் கூறி அதன் பொருள் வினவினர். ஆனல் ஔவை எளிதில் அது "ஆரக்கீரை" என்று கூறியதே

யன்றி, கம்பன் தன்னை 'அடி' என்று இருபொருள்படக் கூறியதன் இழிவு உணர்ந்து அதே நடையில்,

" எட்டேகால் லட்சணமே! எமனேறும் பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே! குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னா யது "

என்று பாடினார்.

கம்பன் ஔவையின் வாய்மை நன்குணர்ந்தவர். ஆகவே அவரை மேலும் எதிர்த்துக் கொள்வதால் தமக்கு அவமதிப்பு மலியும் என்றுணர்ந்து தலைகுனிந்து அப்பாற் சென்றனர்.

## வள்ளுவரும் ஔவையும்

தமிழ் மறை என அனைவரும் போற்றுவது திருக்குறள். அதனை இயற்றிய திருவள்ளுவர் நாவன்மையை தமிழகம் இன்னும் பாராட்டும். திருக்குறள் அறம், பொருள், இன்பம், என்று மூன்று பிரிவு கொண்டது. வள்ளுவர் இந்நூலை அரங்கேற்றியபோது அதைத் தம் தமக்கையாராகிய ஔவையிடம் காட்டினார். அதனைக் கண்ணுற்ற ஔவை அதில் அறம், பொருள், இன்பம் என்ற முப்பால் பொருள் பிரிவுகள் அடங்கி இருந்தமையேயன்றி, நான்காவதான வீட்டைப் பற்றியும் பொருள் சேர்க்க நினைத்து,

" ஈதல் அறம்; தீவினைவிட் டீட்டல்பொருள் என்ஞான்றும்
காத லிருவர் கருத் தொருமித்—தா தரவு
பட்டதே இன்பம்; பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

என்று பாடி முடித்தார்.

இங்ஙனம் எழில் சிறந்த திருக்குறளை வள்ளுவர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பலகையில் இருத்தினர். சங்கப் பலகை தெய்வீகம் கொண்டது. உயர் ஞானமும், அருளும் கொண்ட பாடல்களுக்கே அதில் இடமுண்டு. மற்ற நூல்கள் பலகையினின்று கீழே நழுவிப் பொய்கையில் மூழ்கிவிடும். திருக்குறள் சங்கப்பலகையில் இடம் பெற்று, அத்துடன் வைக்கப்பட்ட ஏனைய நூல்கள் நீரில் மறைந்தன. பாவலரும் நாவலரும் திருக்குறளைப் புகழ்ந்து பாராட்டினர். இதை இடைக்காடர் என்ற புலவர் தம் நூலில் மிகவும் பாராட்டிப் பாடினார். ஆனால் அப்பாடலில் காணப்பட்ட சிறு குற்றத்தை ஔவை திருத்தி அமைத்துக்கொடுத்தார்.

## பொற்சங்கிலி அற்று விழுந்தது

பாண்டிய மன்னன் தமிழ் வளம் கண்ட அறிஞன். புலவர் தமிழை ஆதரித்து, புலவர்களுக்கு பரிசளித்து ஊக்கினன். ஒரு சமயம் அவன் தமிழ் நலம் கருதி ஓர் தந்திரம் செய்தான். பசும் பொன் சங்கிலிகளைப் பொருத்தி ஊஞ்சல் அமைத்து அதன்மேல் ஒரு பொற்குவியலை வைத்து, இப்பொற் சங்கிலி அற்று விழும்படி செய்யுள் பாடுபவருக்கு இக்குவியல் சொந்தம் என்று பறை சாற்றினர். அதுகண்ட அறிஞர் பலர் அரும்பதிகங்கள் பாடினர்; ஆயினும் பொற்சங்கிலி அற்று வீழ்ந்திலது. அங்ஙிலையில் நீண்ட நாட்களாக அப்பொன் குவியல் கிடந்தது.

அச்சமயம் ஔவை அவ்வழிச் செல்ல நேர்ந்த போது அரசன் பரிசு உண்மை அறிந்து,

ஆர்த்தசபை நூற்றெருருவர்; ஆயிரத்தொன் றும்
புலவர்
வார்த்தைபதி னுயிரத் தொருவர்;—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே! தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு.
தண்டாம லீவது தாளாண்மை; தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை;—அடுத்தடுத்துப்
பின்சென்றுல் ஈவது காற்கூலி ; பின் சென்றும்
ஈயான் எச்சம்போல் அறு.
சென்று முதுண்பதற்குச் செய்வதரிதென்று
மற்றுமு துண்பான் மனை வாழ்க்கை—முன்றிலில்
துச்சிலிருந்து துடைத்தெழு கண்ணீராலெழ்
எச்சம் இதுமேல் இறு.
வழக்குடையான் நிற்ப வலியானைக்கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறு மென்றுல் அறு.

என்ற நான்கு அருட்பாக்களையும் பாட, உடனே பொன் சங்கிலி அற்று விழுந்து பொற்குவியல் ஔவைக்குச் சொந்தமாயிற்று. அனைவரும் அவர் திரு வாக்கை மெச்சினர்.

## கடவுள் இல்லாத இடம் எது ?

தமது முதுமைப் பருவத்தில் ஔவை ஒரு கோயில் முன் கால்களை நீட்டி அமர்ந்திருந்தார். தள்ளாடிய அவர் அம்மன் திருவுரு முன் கால் நீட்டி இருந்த

தைக் கண்ட கோயிற் பூசாரி ஔவையைச் சினந்து கொண்டான். கோயில் சந்நிதி முன்பு கால் நீட்டி அமர் தல் குற்றமென அவன் ஔவைக்கு அறிவுறுத்த லானுன்.

ஆனால் ஔவை அவனை நோக்கி "பூசாரியே! உன் நினைவு அதுவாயின், நீ கடவுள் இல்லாத திசையை எனக்குக் காட்டுவாயாக! அப்பக்கம் என் காலை நீட்டிக் கொள்ளுகிறேன்" என வினவினர்.

ஔவையின் பொருளை உணர்ந்த பூசாரி அப் பிராட்டி யாரெனத் தெரிந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

## புகழ் கொண்ட புகழேந்திக்குப் புகழ்மாலை

சோழ நாட்டின் தலைநகரம் உறையூர் எனபது. ஔவை காலத்தில் சோழ நாட்டை குலோத்துங்கன் ஆண்டுவந்தான். சோழன் அரசவையில் ஒட்டக்கூத்தர் பெரும் புலவராக வீற்றிருந்தார். ஒட்டக்கூத்தர் கல்விச் செருக்குக் கொண்டவர். தம் போன்ற புலவர்களை மதித்திலர். மேலும் வாய்ப்புக் கிடைத்தபோது அவர் களைக் கீழ்மைப்படுத்தவும் அவர் அஞ்சமாட்டார். குலோத்துங்க சோழன் மனைவியர் கோப்பெருந்தேவி என்பவர். அவர் தம் வீட்டினின்று அழைத்து வந்த புகழேந்திப் புலவரை ஒட்டக்கூத்தர் பெரிதும் அவமதித்து வந்தார். புகழேந்தி உறையூர் சிறையில் பட நேர்ந்தது.

## ஒட்டா! ஒரு மதி கெட்டாய்!

கலைத் தேவியாகிய ஔவைக்கு இது எட்டியது. ஒரு சமயம் அவர் குலோத்துங்கன் அரசவை வந்த போது, சபையில் ஒட்டக்கூத்தரிடம் அவமதிப்பாகவே நடந்து, புகழேந்தியிடம் தமக்குள்ள விருப்பத்தைத் தெரிவித்துக்கொண்டார். இதைக் கண்டு சினம் கொண்ட ஒட்டக்கூத்தர், "ஓ! அம்மையே! அரசவையில் நீர் என்னை அவமதித்ததற்குக் காரணம் கூறுமின்" என்று வினவ, ஔவை "நும்மைவிடப் புகழேந்தி வல்ல வன்; அதுபற்றியே நாம் புகழேந்தியை மதித்தது. நும்மை மதித்திலோம்" எனக் கூறினர். ஒட்டக்கூத்தர் அஃது உண்மை என நிரூபிப்பீராக எனக் கேட்டார். உடனே ஔவை "ஒட்டக்கூத்தரே! நீர் மேதைப் புலவ ராயின், சோழனைத் தலைமையாகக்கொண்டு ஈற்றடியில் சந்திரன் பெயர் மூன்றிடங்களில் பொருந்தி நிற்க ஒரு பாட்டுப்பாடுக" என விளித்தார். கூத்தர் அது கேட்டு,

வெள்ளத் தடங்காச் சினவாளை
　　வேலிக்கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்து மழைத்துளி
　　யோடிறங்குஞ் சோழா!
கள்ளக் குறும்பர் குலமறுத்த
　　கண்டா! அண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டெம்பேதை
　　பெரியமதி யுமிழந்தாளே!

எனப் பாடினர். ஆனால் ஔவைப்பிராட்டி அது குற்ற மற்றிலது என்று ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை.

தாம் குறித்தவாறின்றி அச்செய்யுளில் இரண்டு இடங்களில் சந்திரன் பெயர் காணப்பட்டதேயன்றி மூன்றிடங்களில் தோன்ருக் காரணம் என்ன என்று கூறினர். "ஒட்டா! ஒருமதி கெட்டாய்" என்று இருபொருள்படச் சொல்லி அவன் செருக்கை அடக்கினர். உடனே அவர் புகழேந்தியைத் தாம் குறித்தவாறு பாடுமின் எனவும் அவர்,

பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா
கொங்கைக் கமரா பதியளித்த
கோவே! ராச குலதிலகா!
வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
மெலிந்த பிறைக்கும் விழிவேலே.

என்று ஔவை விரும்பியவாறு பாடி முடித்தார். சபையார் புகழேந்தியைப் புகழ்ந்தனர். அவர் அவமதிப்பு நீங்கி, பேரவையில் புகழடைந்தார்.

## பேய் அறையுண்டது

ஒரு சமயம் ஔவை ஒரு சாவடியில் தங்க நேர்ந்தது. அப்போது ஒரே கும்பிருட்டு. அச்சாவடியில் நீண்ட நாளாக ஒரு பேய் வாழ்ந்து வருவதாகவும், இரவில் அச்சாவடியில் தங்குபவர் அறையுண்டு அதனுல் இறந்துவிடுவர் எனவும் அவர் கேள்விப்பட்டார். மனமாப்பு கொண்ட ஔவைப்பிராட்டி அப்பேயைக் காண விழைந்து அக்கும்பிருட்டிலேயே படுத்துக்

கொண்டாள். அங்கு ஓர் கழுகு நடமாடுவது உண்மையே. அது ஔவையை நான்கு சாமத்திலும் வந்து மிரட்டியது. ஆனால் ஔவை அதுகண்டு பயப்படவில்லை. அதன் செருக்கை அடக்கவல்ல செய்யுட்களை நான்கு சாமத்திலும் பாடி, அதன் பலத்தை ஒடுக்கிவிட்டார். தம் பலம் ஒடுங்கிய அலகை தம்மை ஆசி செய்யும்படி வேண்டிக்கொண்டது. எனவே ஔவை அப்பேய் வரலாறு கேட்க அது பின்வருமாறு கூறியது.

## தொழுநோயாளி அரசிளங் குமரியை

''அம்மையே! நான் இவ்வூரை முன்னம் ஆண்ட அரசனின் குமாரி. நான் ஒரு சமயம் என் மாடியில் உலாவி வரும்போது, அவ்வழிச் சென்ற ஓர் அரசிளங் குமரனைக் காதலித்து அவன்பாற் சேர, ஒரு திருமுகம் தீட்டி அவன் முன் எறிந்தேன். ஆனால் அவன் கல்வியற்ற கபோதி. நான் தீட்டியதை தாமே வாசித்தறிந்து கொள்ளச் சக்தியின்றி, தொழுநோயாளி ஒருவனிடம் வருந்திக்காட்டி, அதில் தீட்டியுள்ள செய்தியைத் தமக்குக் கூற வினவினர், ஆனால் அந்நோயாளி மிகவும் தந்திரமாக ஓலைச் செய்தியை அரசனுக்கு வேறுவிதமாகக் கூறி அந்த அரசிளங்குமரன் உடனே அந்த நாட்டைவிட்டு ஓடச்செய்தான். அதுமட்டுமில்லை.

அந்த நோயாளி நான் குறிப்பிட்ட இடத்தில் அன்றைய இரவு கும்பிருட்டில் சந்தித்தான். உண்மை அறியாத நான் அவன் அரசிளங்குமரன் என ஏமாறிப் பிணைந்து குலாவினேன். பின்னர் உண்மை தெரிந்து

மனம் பதைபதைத்தது. கொடுமை எனத் தெரிந்தும் கொடும்பாவியாக நடந்து கொண்ட இக்கோர மனிதனை உயிருடன் விட என் மனம் சம்மதிக்கவில்லை, ஆதலின் என் குறுவாளால் அவனை மறுகணம் குத்திக் கொன்று விட்டு. நானும் உயிர் மாய்ந்தேன், அதன் பயனாகவே இன்று நான் பேய் வடிவம் தாங்கி, பிறர் நடுங்கும்படி இருப்பது'' என்று கூறி முடித்தாள்.

இதை அறிந்த ஔவை அவள் நிலைமைக்கு இரங்கி, அப்பிறவியில் அடைந்த துன்பம் கண்டு மனம் பொறுமல், மறுபிறவியிலாயினும் தான் விழைந்த காளையை காதலித்துக் கருத்தொருமித்துக் கலந்து வாழும்படி ஆசி செய்து ஆண்டிருந்து அகன்றாள்.

## ஔவை பாடிய குறள்

ஔவையின் தெய்வ வாக்கு அருள் மலிந்தது. அவரது ஞானம் திருவருளை நினைப்பூட்டும். ஞானக் களஞ்சியம் போன்ற அவர் தீட்டிய எழுத்தோவியங்கள், இன்றல்ல, என்றென்றைக்கும் அழியாத அறிவுக் களஞ்சியம். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அவர் பாக்களின் ஒவ்வொரு அடியிலும் ஆயிரம் பக்கங்களும் பொருள் தரும் மிகச் சிரிய உண்மைகள் உண்டு. உலகஞானம் வேண்டற்படும் உயர்கருத்துக்கள் கொண்ட அந்நூலில் வாழ்க்கை நுட்பங்கள் நீதிப் பொருள்கள் மலிந்து கிடப்பன காணலாம். நீதி அவர்கள் சுடர்மணி விளக்கெனத் தோன்றும்.

பெண்மைக்குத் திலகமாய், பேதைமைக்கு வைரியாய், பிறர் வியக்கப் புகழிடமாய், பிற்காலச் சந்ததி

யாருக்குப் பெரும் அணிகலமாக விளங்கியவர் ஔவை. அவர் புலமையைப் பாராட்டாத புரவலர்கள் புவியில் இல்லை என்பது புராண உண்மை.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஔவையின் அருள் வாக்கின்முன் பணிந்தனர். கோப்பெருந் தேவி, நாப்பெரும் செல்வி முதலாய செந்தமிழ்ச் செல்வி களுள் ஔவை நற்றிலகமாய் விளங்கினர். வள்ளுவர் இயற்றிய திருக்குறளை ஒப்ப, ஔவை ஒரு குறள் பாடினர்.

## பிறப்பு அழுக்கலுற்றோர்க்குப் புகழுடம்பு மிகை

இங்ஙனம் பல்லாண்டு உயிர் வாழ்ந்து பல கோடி மக்களுக்கு அறிவுச்சுடர் ஏற்றி வைத்த இச்சீமாட்டி தம் உடம்பை வெறுத்து, முடிவில் இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்து கொண்டது எஞ்ஞான்றும் மறக்கற்பாலதன்று. இன்றும் தமிழகத்தில் அறிவரசிகளை ஔவைக்கு ஒப்பக் கூறப்படும். அவ்வம்மை ஏற்றிவைத்த அறிவுச்சுடர் விளக்கு என்றும் நம்மிடை நந்தா விளக்கெனவொளியுடன் பிரகாசிக்கிறது. அவர் சிவபதமடைந்தும், அவர் புகழுடம்பு இன்றும் நம்மிடை உலாவுகின்றது

## இன்பத்தில் துன்பம்

இன்பம் துன்பம் ஆகிய இரண்டும் கொண்டது உலகம். 'உலகு' என்ற சொல் ஒன்றே இதற்குச் சான்றாகும். தமிழ்க்கணக்குப்படி 'உ' என்ற எழுத்து இரு பொருள் என்பதாகும். "லகு" என்பது எளிது என்று பொருள்படும். எனவே உலகு என்ற சொல் இரண்டு எளிய அறநெறி இயல்புகளைக் கொண்டது என்று கூறப்படுமாகில் அது மிகையாகாது. இன்பம், துன்பம்; இலாபம், நஷ்டம்; இரவு, பகல்; வெயில், நிழல், ; உயர்வு, தாழ்வு; வாழ்வு, தாழ்வு; இறத்தல் பிறத்தல், இன்னோரன்னப் பிற இயல்புகளை இவ்வுலகம் கொண்டது.

மக்கள் மாக்களைப் போன்ற குணமின்றி மனிதன் தம் பகுத்தறிவின் பயனை நன்குணர்ந்து, இல்லறத்தை நல்லறமெனவும், துறவறத்தின் தூய்மைப் பயனையும் ஆராய்ந்து, வாழ்வின் வெற்றிச் சிகரத்தை விழையும் ஒருவன் இவ்வொன்றினையே குறிக்கோளாகக் கொண்டிருந்தாலன்றி அது பயன் தருவதில்லை. தம் வழியில் தேர்வுபெற்ற அறிவுப் பெருநிலை மக்களின் மாண்பும், அவர் விரிந்த மனப்பான்மையும், கொண்ட வாழ்க்கை வரலாறுகளையும், தெளிவடைந்து அதன்படி நடத்தல் அறம்.

## புலவர் எழுத்தோவியங்கள்

நம் தமிழகம் ஆதிமுதல் பாரத அன்னையின் நற்றிலகமென்னத்திகழ்ந்து வந்தது. ஈண்டு உதித்த

நற்றிலகப்புலவர்கள் தீட்டிய எழுத்தோவியங்கள் என்றும் அழியாத கல்விக் களஞ்சியமென ஒளிவிட்டுப் பிரகாசிப்பதைக் காணலாம். அங்ஙனம் முன்னம் தோன்றிய புலவர்களுக்குள் கம்பனைப்பற்றித் தமிழகம் தோற்றுவாய் செய்வது மிகையாகும். கல்வியிற் சிறந்தவன் கம்பன். கம்பன் கவி, நலம் மிக்க வாய்ந்தது. கம்பன் காவியங்கள் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டவை.

## துன்பக்கேணியில் இன்பம்

உலகவாழ்வில் இன்பம் ஒன்றினையே நாம் நோக்கம் கொள்வது நன்றன்று, இன்பத்தில் துன்பம் கலந்திருத்தலால் தான் இன்பத்தில் இன்பம் இன்னதென அறியமுடியும். துன்பக்கேணியில் துழாவிப் பார்த்தால் அங்கு இன்பம் ஆழ்ந்து கிடப்பதை ஆன்றோர் கண்டனர். பசிநோயால் பரிதவிக்கும் ஒருவன் சிவகளை அளிக்கும் கூழின் உருசியை நன்கறிய முடியும். அறுசுவை உண்டியை அல்லும் பகலும் உண்டு ஓய்ந்து கிடப்பவனுக்கு பசி நோய்பற்றி அறிய விருப்பமேது!

## செல்வம் செல்வது

செல்வம் ஒருவனிடமும் நிலைத்திலது, அது சகடம் போன்றது. இன்று குடை நிழலிலிருந்து குஞ்சர மூர்ந்த முடியுடைய வேந்தன், நாளை அங்ஙனமே செல்வார் என்ற உறுதி ஏது? அவன் ஒருநாள் பச்சைக் கலம் ஏந்திப் பரிதவிக்கும் ஆண்டியாக வயிற்றுச் சோற்றுக்கு வகையின்றி விசித்திர வாதைகட்கு உட்

பட நேரிடுமன்றோ! சுகம், துக்கம் என்பது எங்கே! அது ஓர் இடத்தில் நிலைத்து நிற்பதா!

## இன்பத்தின் இறுதி

உள்ளத்தில் எப்பொழுதும் மகிழ்ச்சி நிலைப்ப தாயின் இகழ்ச்சி என்ற சொல்லுக்கு உலகில் இடம் எங்கே? துன்பத்திலன்றோ இன்பம் பிறக்கும். இன்பத்தின் இறுதியல்லவா துன்பம்:

## இன்பம் : துன்பம்

வாழ்வு, அதிலும் நல்வாழ்வை விரும்பாத மக்கள் இல்லை. ஆனால் இவ்வாழ்வு இருந்த இடத்தில் கிடைப் பதா? ஆறு செல்லும் வேகத்தில் மேடு, பள்ளம் இவற்றைக்கடந்து செல்வதுபோல, இன்பதுன்பங்கள் வாழ்க்கையில் மாறிமாறி வரும்.

## மூதாதையர் காலத்துப் புலவர்கள்

இத்தகைய உயரிய கருத்துக்களை நம்மிடையே வைத்துச்சென்ற நம் மூதாதையர் காலத்துப் புலவர் களை நாம் என்றும் மறக்கமுடியாது. அவர்கள் தம் வாழ்நாளில் இயற்றிவைத்த பொக்கிஷங்கள் இன்று நமக்குப் பெரிதும் உதவுகின்றன. செல்வக் குவியல் களை மலைபோலச் சிறப்பாகக் கொண்டிருப்பினும் அது ஒரு சிறுகலை நூலுக்கு முன் என்ன செய்யும்! இங் ஙனம் பேருபகாரிகளாகத் தோன்றிய பண்டைக் காலத்துப் புலவர்களுள் கம்பர் ஒருவர். அவர் துன்பத் தில் இன்பம் கண்டவர். மறதியில் மாண்பு கண்டவர்.

இல்வாழ்வில் இயல் அறம் கண்டார். தோல்வியில் வெற்றி கண்டார். அடிமை வாழ்வில் ஆண்டை நிலை கண்டார். உலக மாயா சிருட்டியில் மகிமை கண்ட பூமான் கம்பர்.

## கம்பர்

கம்பர் இற்றைக்குச் சுமார் ஆயிரம் நூற்றாண்டு கட்கு முன் தோன்றியவர். சோழநாட்டிலே திருவழுந் தூர் என்னும் பதியிலே உவச்சர் குலத்தில் உதித்தவர். கம்பர் சிறுவயதிலேயே மதிநுட்பம் கொண்டவர். சிறு வ்யதில் அவர் தினம் காளிகோட்டம் செல்வதுவழக்கம். ஒரு சமயம் அவர் முன் காளி அம்மை தோன்றி தம் நாக் கில் எதோ எழுதிச் சென்றது போலக் கனவு கண்டார். அதுமுதல் அவர் தமிழில் நாட்டம் கொண்டு கவி இயற்றும் சக்தி பெற்றார். அன்றுமுதல் ஊற்றுக்கேணி யில் சுரந்துவரும் நீர்போல், அவர் நாமுனையில் கவிகள் எழுந்தன, கற்பனைக் காவியங்கள் பொங்கி வந்தன.

## சடையப்ப முதலியார் பேருதவி

கம்பர் எழ்மையில் பிறந்தவர். எனவே அவர் திருவெண்ணெய்நல்லூரிலே வாழ்ந்த சடையப்ப வள்ள லாரின் உதவியை நாடினார். கம்பர் அருள்வதனத்தில் மிளிர்ந்த புன்னகை முதலியாரை வசீகரித்தது. சடை யப்ப வள்ளல் கொடைத்தன்மையுள்ள சீமான். அவர் பிறருக்கு நந்தாவிளக்கென உதவி செய்தார்.

## இராமாயணக் கதை

சடையப்பவள்ளல் தக்க ஆசானைக்கொண்டு கம்பருக்குத் தமிழ், வடமொழி ஆகிய மொழிகளில் தக்க

படி கல்வி புகட்டி வந்தார். தொல்காப்பியம், சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்களைக் கம்பர் மதிநுட்பம் கொண்டு கற்றார். வடமொழியில் வால்மீகி இயற்றிய இராமாயணத்தை வாசிக்கக் கம்பருக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதில் காணப்படும். கற்பனைகள், எழுத்தோவியங்கள், கதைச்சிறப்பு முதலியன கம்பரின் மனதில் பதிந்தன. எனவே அதை ஒப்ப தமிழில் இராமாயணத்தை இயற்றினார். அந்நூலின் முன்னுரையாகத் திருமகளை வழுத்தி, முப்பது செய்யுட்கள் இயற்றினார். அதன் முதல் பாடல்,

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை-தூய
உறுப்பளிங்குபோல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்."

என்பதாம்.

## சடையப்ப வள்ளலார் சிறப்பு

தம்மை ஆதரித்து வளர்த்த சடையப்ப வள்ளலிடம் கம்பருக்கு மிக்க நன்றி உண்டு. எனவே கம்பர் வள்ளலாரைச் சிறப்பித்துப் பாட விரும்பினார். ஆனால் வள்ளல் விருப்பம் வேறாக இருந்தது. கம்பர் உழவுத் தொழிலைச் சிறப்பித்துப் பாடவேண்டும் என்பது சடையப்பர் விருப்பம்.

## ஏரெழுபது

அங்ஙனமே கம்பர் சின்னாட்களில் ஏரெழுபது என்ற அரும்பதிகத்தைப்பாடி முடித்தார். அதில் வேளாளர் குலத்தைப்பற்றிச் சிறப்பாகப் பாடினார். முற்

காலம் புலவர் இயற்றும் நூற்கள் நாவலர் அவையில் அரங்கேற்றப்படும். ஆதலின் இந்நூலை அரங்கேற்ற ஓர் விழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவுக்குப் பாவலரும், நாவலரும் வந்திருந்தனர், இப்பாவலருள் சேதியார் என்பவர் ஒருவர், அவர் வரும் வழியில் ஓர் அரவம் அவரைத் தீண்டியது. பாம்பு கடித்ததையும் கவனியாது சேதியார் விழாவிற்கு வந்து கலந்துகொண்டார். ஆனால் நஞ்சு தலைக்கேறிவிடவே மயக்கமுற்று வீழ்ந்தார். இதைக்கண்ட அனைவரும் கலக்கமுற்றனர். ஆனால் கம்பர் இறைவனை இறைஞ்சி சில வெண்பாக்களைப்பாட சேதியார் நித்திரை தெளிவுற்றெழுந்தவரைப்போல எழுந்தார், இதனைக்கண்ட அனைவரும் கம்பர் திருவாக்கு கண்டு வியந்தனர்,

## காவிரி கரை புரண்டது

இங்ஙனம் கம்பரின் தமிழ்ப் புலவை யாண்டும் நீள்வதாயிற்று. அவரை அரசர் பலர் தம் அவையில் இருத்தி கௌரவித்து மகிழ்ந்தனர். கம்பர் புதுமைகள் மக்களை வியக்கச் செய்தன. ஒரு சமயம் தமிழகத்தில் காவிரி வெள்ளப்பெருக்கெடுத்துப் பல ஊர்களை அழிக்கலாயிற்று. குடிமக்கள் இருக்க இடமின்றித் தவித்தனர். அரசன் செய்வதறியாது வியர்த்தான். இது கண்ட கம்பர் காவிரியை விளித்து,

"கன்னி அழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரை யழிந்து போனளென்று—இந்நீர்
உரை கிடைக்கலாமோ உலகுடைய தாயே
கரை கடக்க லாகாது காண்."

என்று பாடினர். உடனே காவிரி படம் அடங்கிய அரவுபோல் அடங்கியது. கம்பர் பேருதவி கண்ட

அரசர் அவரை வியந்து அவருக்கு நாடு தந்து கௌரவித்தார். கம்பர் அதன் வருவாயை ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்து மகிழ்ந்தார்.

## " வைக்க வேண்டிய இடத்தில் வைப்பேன் : வள்ளலே "

கம்பருக்கு இத்துணைப் புகழ் கிடைத்ததற்கு உறுதுணையாய் நின்ற சடையப்பவள்ளலை அவர் எந்நாளும் மறந்ததில்லை. ஒரு சமயம் கம்பர் இல்லத்தில் விழா ஒன்று நடைபெற்றது. கம்பர் அழைப்புக் கிணங்கி குறுநில மன்னர்கள் யாவரும் விழாவுக்கு வந்திருந்தனர். ஆனால் சடையப்பவள்ளலார் வருவதற்குச் சற்றுத் தாமதமாயிற்று. தாமதமாக வந்த வள்ளலாருக்கு அமர இடமில்லை. இதைக் கண்ட ஓர் அரசர் தன் இடத்தினின்று எழுந்து அவருக்கு இடம் தந்தார். ஆனால் "அரசே! நீர் கவலைப்படவேண்டாம். அவரை வைக்க வேண்டிய இடத்தில் வைப்போம்" என்றார். இது பற்றியே கம்பர் இயற்றிய இராமாயண காவியத்தில் சடையப்பவள்ளலாரின் சிறப்பை ஆங்காங்கு புகழ்ந்து கூறி உள்ளார் போலும்.

## "மூங்கில் இலை மேலே"

கம்பன் ஒரு சமயம் மாவண்டூர் என்ற ஊரிலே சின்னாட்கள் தங்க நேர்ந்தது. அங்கு ஒரு நாட் காலையில் வயற்புறம் சுற்றி வரும்பொழுது ஏற்றம் இறைக்கும் ஒருவன் முதலடியாக "மூங்கில் இலைமேலே" என்ற அடி மட்டும் பாடிப் போனான். அவ்வடியைக் கேட்ட கம்பர் பாட்டை முடிக்க கருத்துக்கொண்டு முயற்

சித்தார். அது முடியவில்லை. எனவே மாலைமட்டும் காத்திருந்து ஏற்றம் இறைப்பவன் வந்தவுடன் தான் விட்டுப்போன பாட்டை முடிப்பதற்காக "மூங்கில் இலைமேலே தூங்கும் பனி நீரே" என்று அவன் பாடத் தொடங்கியது கேட்டுத் தம் அறிவுத் திறத்தை ஒரு வகையில் உணர்ந்துகொண்டார் என்பது சிறு கதை. ஆதலால் அவர் "ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப் பாட்டில்லை" என்று கூறியதாகவும் தெரிகிறது.

## திருவொற்றியூர் இன்பவல்லி

ஒரு சமயம் கவிவாணர் கம்பர் திருவொற்றியூர் என்னும் திருப்பதியை அடைந்தார். அங்கு எழுந்தருளிய பெருமானைத் தரிசித்து மகிழ்ந்திருக்கும்போது அவ்வூர் மடத்தில் வாழ்ந்த பெண் ஒருத்தியைக் கண்டு அவள் அழகில் ஈடுபட்டார். வல்லி என்ற பெயரிய அக்குமரி கம்பனின் புகழ் கேட்டு அவருடைய உள்ளம் கவர்ந்தாள்.

எனவே வல்லி அவரைத் தன் இல்லம் வரவழைத்து பல நாட்கள் தங்கி இருக்கச் செய்தாள். கம்பர், அவளாற்றிய பணிகளைக் கண்டு மகிழ்ந்து வொற்றியூரை அடுத்த திருமயிலையில் திருவாலன் என்ற பொற் கொல்லனைக்கொண்டு பல அணிகலன்களைச் செய்வித்து இன்பவல்லிக்குத் தந்து இன்புற்றார். கம்பர் அப்போது தான் இராமாயணம் இயற்ற ஆரம்பித்தது. பொங்கி வரும் புத்துணர்ச்சி வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்த

கம்பர், அச்சமயம் இராமாயணக் கதையை ஒவ்வொரு நாளும் பாட ஆரம்பித்தார்.

## நெற்கதிர் கூரை

பின்னர் அவர் திருவெண்ணெய் நல்லூர் செல்ல நேர்ந்தது. அச்சமயம் அவ்வல்லியை விட்டுப் பிரிய மனமின்றி தம்முடன் அழைத்துச் சென்று திருவெண்ணெய் நல்லூரில் ஒரு கூரை வீட்டில் இருக்கச் செய்தார். இது கண்ட சடையப்பவள்ளல் கம்பர் இல்லம் மழையில் நனையுமென எண்ணி நெற்கதிராலேயே கூரையை வேய்ந்தனர். இதை உணர்ந்த கம்பர் வள்ளல் தம்மிடம் கொண்ட அன்பு கண்டு மனம் களித்தார்.

## சடகோபரந்தாதி

இங்ஙனம் பாடி முடித்த இராமாயணக் கதையை இராமாவதாரம் எனப் பெயரிட்டு அதைப் புலவர் முன்னர், இராமர் திருமணம் நடந்த பங்குனி உத்தர சுப தினத்தில் அரங்கேற்ற ஏற்பாடு செய்திருந்தார். அச்சமயம் திருவரங்கப் பெருமான் அர்ச்சகர் மூலம் "கம்பா! நம் சடகோபனைப் பாடினையோ!" என்று கேட்டார். இறைவன் விருப்பம் உணர்ந்த கம்பர் உடனே "சடகோபர் அந்தாதி" என நூறு கலித்துறைப் பாக்களைப் பாடி வைணவ சமயத்துக்கே பெருமதிப்பளித்தார். வைணவர்கள் இந்நூலின் மேன்மையை உணர்ந்து பேருவகை கொண்டு மனம் பூரித்தனர்.

## கவிச்சக்ரவர்த்தி

கம்பர் தாம் இயற்றிய இராமாயணக் கதையை தாமே சடையப்பவள்ளலுக்குப் பாடிக்காட்டி அவரை மகிழ்வித்தார். இராமாயணக் கதையைக் கேட்ட குறுநில மன்னர்களும், மூவேந்தரும் கவிச்சக்ரவர்த்தி கம்பர் எனப் புகழ்ந்தனர்.

அவர் புலவர் கோனுக்குப் பல விருதுகள் தந்து மகிழ்வித்தனர். கம்பரைப் பல்லக்கில் சுமத்தி பவனி வந்து, சின்னம் தந்து சிறப்பித்தனர். அவர் செல்லும் வழியில் உள்ள சத்திரம், கோயில், குளம், கேணி, முதலியவற்றை அவருக்கே மான்யமாக அளித்தனர். அன்று அவர் போன வழியை மக்கள் "கம்பன் போன வழியைக் கண்டு கழித்தது இவ்வளவு" என்று குடிமக்களுக்குத் தீர்வை தள்ளித் தரப்பட்டது.

## "கன்னு! பின்னு! மன்னு! தென்னு"

ஒரு சமயம் கம்பர் சோழ நாடு சென்றார். சோழ அரசன், தம்மைப் பாடும் பாவலருக்குத் தக்க பரிசில்களை அளிப்பது வழக்கம். அறிஞர் பலர் அரசனை அணுகி அரும்பதிகங்கள் பாடி, சோழன் தரும் பரிசில் பெற்று மகிழ்வர். அதுகண்ட ஓர் ஏழைக் குடிமகன் மனைவி, தம் கணவனையும் அரசனிடம் அவன் வெகுமதி பெற்று வரத் தூண்டினார். நீட்டோலையை வாசிக்க மாட்டாதவன். எனவே அரசன்மீது அரும்பதிகங்கள் பாடி பரிசில் பெறுவது எங்ஙனம்? அந்நிலையில் அவன் தன் மனைவியின் தூண்டுதலால் அரசவையை நோக்கிப் புறப்பட்டான். ஆனால் தான் வழியிற் கண்ட காட்சிகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரு செய்யு

ளாகப் பாடிவிட்டான். வழியில் ஒரு சிறுவன் சிறு பொம்மையை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண் டிருந்தான்.

அதுகண்ட குடியானவன் அச்சிறுவன் கூறிய "மண்ணுண்ணி மாப்பிள்ளையே" என்ற சொல் அவன் காதிற்பட்டது. சிறிது தூரம் சென்ற பின் காக்கை ஒன்று கரைவதைக் கேட்டு "காவிரையே" என்றான், அதைத் தொடர்ந்து குயி லோசை கேட்டு "கூவிரையே" என்றான். அதைத் தொடர்ந்து பெருச்சாளி ஒன்று சடுகுடு என்று ஓடி யது. அவை அனைத்தையும் ஒன்றாகக் கூட்டி, தன் நண் பன் ஒருவனிடம் காட்டினபோது அவன் நகைத்து இதென்ன "கன்ன, பின்ன, மன்ன" எனக் கவி செய்துவிட்டாயே என்றான். குடியானவன் அதைச் சேர்த்துத் தம் மனைவியிடம் காட்டினான். ஆனால் அப்பாட்டில் அவ்வூர் அரசனின் பெயர் இல்லையே என அவள் இயம்பலும் உடனே அத்துடன் "மன்ன வன் பெயர் சோழங்கப் பெருமானே"

என்று முடித்துக்கொண்டான். மறு நாள் அவன் தன்னைப் புலவனைப்போல் அலங்கரித்துக் கொண்டு அரசர் முன் சென்று,

*மண்ணுண்ணி மாப்பிள்ளையே!*
*காவிரையே! கூவிரையே!*
*உங்கள் அப்பன் கோவில் பெருச்சாளி*
*கன்ன, பின்ன, மன்ன, தென்ன,*
*சோழங்கப் பெருமானே"*

என்று பாடி பல்லிளித்து நின்றான். சோழ மன்னன் இது கேட்டு பொருள் புலப்படாமல் வியக்க நேர்ந்தது.

நாவில் நல்லிசை பொங்கும் கம்பர் அச்சமயம் அரசவையில் வீற்றிருந்தார். கம்பருக்குக் குடியானவன் அப்பாவி என்று புலப்பட்டது. வறுமையைப்பற்றி அவன் அவ்விதம் பாடி, பரிசு விழைந்து நிற்கும் நிலைமையை எண்ணி, அவனைக் கௌரவிக்க நினைத்து அச்செய்யுளுக்குத் தாமே பொருள்கூற முன்வந்தார். அவர் பொருள் கூறியது பின் கண்டவாறு:-

"இச்செய்யுள் சீர்குறைந்து இருத்தல்பற்றி அதற்கு ஆசிரியப்பா எனப் பெயரமைத்து அச்செய்யுளின் சொற்றொடர் சற்றும் பிறழாமல் "பூமியை உண்ட புண்ணியனே! திருமகளின் அருமை மைந்தனே! கற்பகச் சோலைக்குத் தலைவனே! பூமியின் அரசனே! உங்கள் தந்தை வில் போரில் அரிமாவைப் போன்றவன். கொடையில் கர்ணனை ஒப்பவன்; பொறையில் தருமனை ஒத்தவன்! என்றும் நிலைத்து நிற்கும் ஆட்சியைக் கொண்டவன்! தமிழகத்தில் பாண்டிய மன்னனை ஒத்தவனே! சோழ நாட்டின் ஒரு பகுதியின் அரசனே!" என்று விளக்கினார். இதைக் கேட்ட குடிமகன் ஆச்சரியப்பட்டான். அரசனும் அவனுக்கு வேண்டும் பரிசில்களைத் தந்து அவனை ஊக்கமளித்து அனுப்பினான்.

## "அரசே! நீவிர் என் அடிமை"

கம்பர் சோழ நாட்டுக் குலோத்துங்கனுடன் சில காலம் தங்கி இருந்தார். ஒரு சமயம் கம்பர் அரசனுடன் உலாவச் சென்றார். அப்பொழுது அரசன் எழில் மிக்க காட்சி ஒன்றைக் கண்டார். நாலில மக்கள் இறுமாந்து குடிமை கொள்வதும் ஆங்காங்கு

நீலவனப்புடைய பூம்பொழில் பச்சைப் பசேலெனப் படர்ந்திருக்கும் தாவரங்களிடையே பூத்து, காய்த்து, பழுத்து, இருப்பதும் கார்மேகம் கண்ட மயில் தம் தோகையை விரித்து ஆடி மகிழ்வதும், இன்னிசைக் குரலில் குயில்கள் பாடிக் களிப்பதும், தேனை உறுஞ்சி உண்டு ரீங்காரம் செய்யும் வண்டுகளையும் கண்ட அரசன் ஒரு கணம் நகைத்தான்.

அது கண்ட கம்பர் உண்மை அறியாது நகைத்த காரணம் வினவ அரசன் இறுமாந்து, "இவ்வழகிய நாடும், மக்களும் இன்று என் அடிமையன்றோ! ஆதலின் நான் என்னையறியாமல் நகைத்தேன்" என்றான் அரசன். அரசன் செருக்கைக் கண்ட கம்பர் அவனை அடக்கக் கருதி, "அரசே! தங்களுக்குச் சோழ நாடு அடிமை என்பது உண்மையே! ஆனால் தாங்கள் என் அடிமை என்பதை மறக்கவேண்டாம்" என்று கூறிக் குறுநகை செய்தார்.

இதைக் கேட்ட அரசன் தலை குனிந்தானென்றும், கம்பன் சொல்லுக்கு பதில் சொல்ல மனமின்றி, மஞ்சத்தில் வீழ்ந்து சிந்தனைக் கடலில் ஆழ்ந்தான். அந்நிலையில் அவனுக்கு ஆறுதல் கூற முன் வந்த அவன் இல்லக்கிழத்தி உண்மை உணர்ந்து கம்பரை எப்படியும் அவமானப்படுத்தக் கங்கணம் கட்டிக்கொண்டாள். எங்ஙனமேனும் கம்பரைத் தலைகுனியவைக்க அவள் திடமனது கொண்டாள்.

## தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை

அன்று மாலை தேவியார் கம்பரை அழைத்து வெகு தந்திரமாக "கம்ப நாட்டாரே! நமது விருப்பம் ஒன்றுள்

ளது அதை நிறைவேற்றுமின்'' என வினவினுள். ''கம்பன் அம்மையே தாங்கள் அரசனின் காதற் களஞ்சியம், அதனுல் தாங்கள் எனக்கு மகளாகின்றீர். என் மகள் கேட்பதை நான் மறுப்பதற்கில்லை. தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவது என் கடமை. வேண்டியது கேண்மின்'' என்முர். தேவியார் கவிஞரை நோக்கி ''நீர் தாசி பொன்னிக்கு அடிமை என்று ஓர் ஓலையில் எழுதி என்னிடம் தரவேண்டும்'' என்முள் உடனே கம்பருக்கு தேவியாரின் சூழ்ச்சி புலப்பட்டது. ஆயினும் மறுக்காமல் தேவியின் பிரியப்படி எழுதிக் கொடுத்து மீண்டார். இதை உணர்ந்த அரசர் கம்பர் தன் அடிமை என்று சாத்திரம் கூறும் வாய்ப்புக் கிடைத்தது பற்றிப் பெருமிதம் கொண்டார்.

மறுநாள் அரசவையில் கம்பரை விளித்து அரசன் புலவரே தாங்கள் தாசி பொன்னிக்கு அடிமை என். பது உண்மையோ!'' எனத் தம் கை ஓலையை அரசவையில் நீட்டினுர். கம்பன் கவிஞனல்லவா? தமக்கு விரிக்கப்பட்ட இச்சதியினின்று மீள அவருக்குத் தெரியாதா? ஆயினும் அவர் நீட்டோலை வாசகத்தை மறுக்காமல் ''நீவிர் கூறியது உண்மையே. நாம் தாசி பொன்னிக்கு அடிமை என்று மறுமுறையும் கூறுகிறேம்'' என்றனர். அது கேட்ட அவைப் புலவர் கம்பரை எள்ளி நகையாடினர்.

ஆனல் கம்பர் தலை குனிவின்றி ''அவைக்களப் புலவர்களே! இதில் குற்ற மென்ன? நாம் தாசி பொன்னிக்கு என்றும் அடிமை என்பது உண்மை

யன்றோ! என்றென்றைக்கும் நாம் தாசிக்கு அடிமை என்பது மறுக்கமுடியாது. தாய்மை கொண்ட அழகிய திருமகளுக்கு (சகல கலா வல்லிக்கு) கம்பன் அடிமை என்று கூறியதில் வெட்கமேது, வீண் இகழ்ச்சி ஏது!'' எனக் கூறினார். சோழ மன்னன் கம்பர் தம் சொல்லின் வேறு பொருள் கூறித் தப்பித்துக் கொண்டதும் கண்டு வெகுண்டான். தாம் அளித்த பரிசில்களையும் பறித்துக்கொண்டு தம் நாட்டை விட்டு உடனே அகலும்படி பணித்தான். இதைக் கண்ட கம்பர் அஞ்சவில்லை, சோழ நாட்டினின்று நீங்கினார்.

## நில்லாய் நெடுஞ் சுவரே

கம்பர் வழிச் செல்லுகையில் நேர்ந்த மற்றொரு சம்பவம் விந்தையானது. வேலி என்ற ஒருத்தி தமக்கு ஓர் இல்லம் கட்டிக்கொண்டிருந்தாள், அந்த வீட்டின் நெடுஞ் சுவர் அவள் பல முறை கட்டி முடித்தும் அது நில்லாமல் வீழ்ந்தது. எத்துணை முயற்சி செய்தும் சுவர் நில்லாது வீழ்ந்துபோவது கண்டு வேலி மனம் நொந்து கிடந்தாள். எனவே அவள் தமக்கு அச்சுவர் கட்டித் தருபவனுக்கு ஒரு குறுணி நெல் வெகுமதி தருவதாகப் பறைசாற்றி இருந்தாள். இதையறிந்த கம்பர் அங்குச் சென்று அச்சுவரை நோக்கி,

மற்கொண்ட திண் புயத்தான் மாநகர் விட்டிங்கு வந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவை அறிவார் ஈங்கிலையே
விற்கொண்ட வாணுதலாள் வேலி தருங் கூலி
நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே.

எனக்கூறி அச்சுவரை எழுப்பினார். அவள் பணித்தபடியே கம்பர் குறுணி நெல் கையேந்தி வாங்குமளவும்

அச்சுவர் நின்று பின்னர் உடனே சாய்ந்தது. இதைக் கண்டு வியப்புற்ற வேலி கம்பர் சொல்லின் திருவருளைக் கண்டு வியந்து அவர் காலில் தெண்டனிட்டு நெடுஞ் சுவர் எப்பொழுதும் வீழாதிருக்க வேண்டிக்கொண் டாள். அங்ஙனமே கம்பர் அச்செய்யுளின் இறுதி அடியை மாற்றி "நெற்கொண்டு போனாலும் நில்லாய் நெடுஞ்சுவரே" எனப் பணித்தார். அங்ஙனமே அச் சுவர் நிலைத்து நின்றது. கம்பரின் அருள் வாக்கினைக் கண்ட அனைவரும் அவரைப் புகழ்ந்தனர்.

## எந்நாளும் காப்பர் வேளாளர்

பின்னர் புலவர் தம் வழி நடையில் பசிப்பிணி மூண்டு, உடல் வியர்த்து ஏங்கிச் சென்றார். அந்நிலையில் அவர் தம் கண்ணிற்பட்ட செக்கிழுக்கும் செக்கனையும், மறை ஓதும் பார்ப்பனனையும் அண்மி வயிற்றுப் பசி தீர்க்க வேண்டி நின்றார். ஆனால் அவர்கள் கம்பரை கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. முடிவில் அவர் ஒரு மரத்தடியில் சோர்ந்து கிடந்தபோது ஓர் உழவன் அவரைக் கண்டான். அவ்வேளாளன் கம்பருக்குத் தம் உணவில் ஒரு பகுதியை அளித்து சீவகனை தீர்த்தான். கம்பர் வேளாளன் உதவியைப் பாராட்டி,

> செட்டி மக்கள் வாசல் வழிச் செல்லோமே: செக்காரப்
> பொட்டி மக்கள் வாசல் வழிப்போகோமே—முட்டிபுகும்
> பார்ப்பாரகத்தை யெட்டிப் பாரோமே: எந்நாளும்
> காப்பாரே வேளாளர் காண்.

எனப் பாடினார்.

## வண்ணான் வெளுத்த ஆடை

ஒரு சமயம் கம்பர் ஒரு வண்ணானை வாழ்த்திய உண்மையை இங்குக் காணலாம். சீராமன் என்ற வண்ணான் கம்பருக்குத் தூய்மையான ஆடைகளை வெளுத்துக் கொடுப்பது வழக்கம். அவன் தன் தொழிலில் காட்டும் ஊக்கமும் தமக்கென அவன் செய்யும் உண்மைச் சேவகத்தையும் கண்டு மெச்சி, அவன் சலவையின் நேர்மை மகிழ்ந்து நீரோடு ஓடும் கங்கைக்கும், நாமகளுக்கும் திருமால் ஏந்திக்கொண்டிக்கும் சங்கைக்கும கூட இருந்திலாது அவன் தமக்கு வெளுத்துக் கொடுக்கும் சலவையின் தூய்மை என்று புகழ்ந்து பாடினார்.

## அருந்தவப் புதல்வன் அம்பிகாபதி

கம்பருக்கு இனிய கண்மணியென செல்வப் புதல்வன் ஒருவன் உண்டு. அவன் தந்தையாரின் புலமை முற்றிலும் ஆற்றமைந்த அறிஞன். அவன் சிறப் புணர்ந்த சோழ மன்னன் அம் மைந்தரை தம் அவைப் புலவரெனத் தம்மகத்தே வைத்து இன்புற்றிருந்தான். அம்பிகாபதி என்னும் அம்மைந்தன் சோழ அரசன் விருதுகளைப் பெற்றது அளப்பில. அவர் புகழ் எங்கும் பரவியது. அது அரையன் அந்தப்புரத்துக்கும் நீள்வதாயிற்று. அரசர் மகள் முழுமதியமெனத் தகும் பேரொளி வாய்ந்த கட்டழகி. கார் காலத்தில் நடம் பிடித்து ஆடும் மயிலெனத்தகும் அப்பெண் அம்பிகா பதியைச் சிறு வயது முதல் நன்கறிந்தவள். சொற் சுவை, பொருட்சுவை மிகுந்த அவன் சொற்கள் அவள்

செவிகளில் கனிரசமெனப் பாய்ந்து அவளை வசீகரித் திருந்தன. அவள் அம்பிகாபதியிடம் தம் காதலைத் தெரிவித்துக்கொள்ள ஏற்ற வாய்ப்பு நோக்கி இருந் தாள்.

எனவே அவள் தம் உள்ளக் கிடக்கையை ஓர் ஓலை யில் தீட்டித் தம் தாதி மூலம் அம்பிகாபதிக்கு விடுத் தனள். அது கண்ட அம்பிகாபதி திடுக்குற்று, தம் நிலைக்குப் பெரிதும் உவப்பவனாயினும் அதனால் மிகப் பெரும் துன்பத்தை நினைத்து மலைத்தான். சோழ அரசன் செய்தி உணர்வானாயின், தம்முயிருக்கு இன் னல் வரக்கூடும் என்பதை உணர்ந்தான். எனவே அரையன் மகளின் காதல் வலையினின்று தப்பி நீண்ட தூரம் சென்றுவிடவும் அவன் மனம் துணிந்தது. ஆயி னும் திடமனம் கொண்டு அரசிளங்குமரியை சந்தித் தான். பச்சைப் பசேலெனப் படர்ந்திருக்கும் தாமரைக் கயத்தில் நிமிர்ந்து நிற்கும் பொற்றாமரைபோல் அவள் எழில் மிகப் பிரகாசிப்பது கண்டு அம்பிகாபதி தன்னை யும் ஒரு கணம் மறந்தான்.

அவள் எழில் அம்பிகாபதியை அடிமைப்படுத்தி யது. அவள் வதனம் அவன் அண்மை சேரத் துடி-துடித் தது. அவள் கனிரசம் ததும்பும் உதடுகளினின்று தவழ்ந்து வரும் உரைகளை அம்பிகாபதி அவாவி நின் றான். அவள் தண்ணழகு பேரொளிவிட்டுப் பிரகாசித் தது.

அரசன் மகள், தம் தந்தையாரைப் போலவே தமிழ்ப் புலமை கொண்டவள். அந்நிலையில் அவள்

அம்பிகாபதியை தம் வினவிற்கு விடைபகர விரும்பி னாள். நுட்ப மதியும், ஆழ்ந்த அறிவும் கொண்ட அப் பெண்ணரசி தமிழ் மறையில் மிகத் தந்திரமான வினவுக்கு அம்பிகாபதி அளித்த விடைகளும் அவள் இதயத்தின் காதல் சுரத்தை கனல்போல் எரித்தது. அந் நிலையில் இருவர் கண்களும் ஒன்றின, கருத்தொருமித்தது. உள்ளங்கள் குழைந்தன. அம்பிகாபதி அவளைத் தழுவி அழகு ததும்பும் கன்னங்களில் ஆயிரம் முத்தங்களிட்டான். அவை ஆணி முத்துக்கள் என மன்னன் மகவு மார்பகத்தில் திகழ்வதுபோல் தோன்றின.

இவ்வாறு அம்பிகாபதியும் அரையன் மகளும் அடிக்கடி சந்திக்கலாயினர். இது சின்னாட்களில் ஊர் முழுதும் பரவலாயிற்று. இது கேட்ட அரசன் வெகுளி கொண்டார். அம்பிகாபதி அரசிளங்குமரியிடம் கொண்ட காதல் அவன் உடலைச் சுட்டது. கம்பன் இச்செய்தி கண்டு திடுக்கிட்டான். என்ன தீது நேரிடுமோ என அஞ்சி இறைவன் திருவருளை வருந்தி நின்றார் கம்பர். அம்பிகாபதி தம் மகள்பால் கொண்ட காதல் பொய் வதந்தியன்று; உண்மையே என உலகத்தாருக்குத் தெரிவிக்க அரசன் மனம் துணிந்துவிட்டது. சோழ இளவரசியை, அவள் சோறுண்டு வயிறு பிழைக்கும் ஒரு புலவன் மகன் விழைவது குற்றமுடைத்து என அரசன் மனம் துடிதுடித்தது.

## ஆண்டை மகளும், ஆண்டி மகனும்

எனவே அரசன் தம் அமைச்சர் திட்டப்படி ஓர் நல் விருந்து நடத்தினர். அவ்விருந்துக்குக் கம்பரும்

அவர் மைந்தரும் வந்திருந்தனர். விருந்தோம்பல் செய்யும் தலையாய பொறுப்பு அரசன் மகளாருக்குத் தரப்பட்டது. தம் காதற் களஞ்சியத்துக்குத் தம் கையாற் கனிரசம் ததும்பும் சிற்றுண்டி படைக்கும் பேற்றினை எண்ணி அவள் மெய் சிலிர்த்தாள். அனைவரும் விருந்தில் உண்டு களித்துத் தாம்பூலம் தரித்து சந்தனம் பூசி மகிழ்வெய்தினர். அம்பிகாபதியும் மண மிகுந்த சந்தனம் பூசி மதிமயங்கினன்.

உள்ளத்தில் மகிபன் மகளின் குளிர் நிழலும், தம் காதல் வெள்ளத்தில் அவளுடன் கூடிக் குலவும் மனப் போக்கும், உடம்பில் மணமிகுந்த குளிர் சந்தனம் பூசிய அம்பிகாபதி, தன் நிலையை சற்றே மறந்தான். அரசன் தனக்காக விரித்துள்ள சதி வலையின் சிறு கண்கள் அவன் பேதைமைக் கண் களுக்குத் தோன்றாமற் போயின. அரசன் அவனை அழைத்து, கனிகள் சில கொணர்ந்து விருந்தினர்க்கு வழங்குதி எனக் கூறிய சொல்லின் உட்கருத்து விளங் காமற் போயிற்று. எனவே அரசன் குறித்த அறையிற் சென்றான்.

ஆங்கு அரசன் மகளார் வேறு வேலையாக முன்னிருத்தலை அவன் அறியான். ஆனால் எதிர்பாராத தம் சந்திப்பைப் பெரும்பேறு என எண்ணிய அம்பி காபதி ஒரு கணம் மறந்தான். அவள் எழில் அவனைத் தீப்பற்றி எரித்தது. அவள் மேனியழகு அவன் கண் களைக் குருடனாக்கிவிட்டது. உள்ளம் ஒருமைப்பட்ட காதல் கண்கள் ஒரு விநாடி ஒன்றுபட்டன. வாய்

திறந்து பேசாமலேயே அவர் தம் நினைவு மறந்து நின்றனர்.

அந்நிலையில் அம்பிகாபதி மார்பில் பூசப்பட்ட குளிர் சந்தனம் அவள் மார்பில் சுவடு அழுந்திய குறிப்பை அரசிளங்குமரி கவனிக்கவில்லை. வாய்ப்பு கண்ட மகிபன் அம்பிகாபதியை சான்றுகளுடன் மெய்ப்பித்தான். ஆண்டி எனத்தகும் அம்பிகாபதி ஆண்டையான தம் மகளை, அவாவியது குற்றமென நிரூபித்தான், இந்நிலை தவிர்க்க வகையற்ற கம்பர் மைந்தன்பால் இரக்கம் கொண்டாரெனினும் செய்வ தறியாது திகைத்தார். நடப்பது நடக்கட்டும்: எல்லாம் கடவுள் செயல் என வாளாவிருந்தார்.

## பேரின்பப் பாடல் நூறு

அரையன் தீர்ப்புப்படி அம்பிகாபதிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆயினும் அதற்கு முன் ஒரு நிபந்தனை அவையில் வைக்கப்பட்டது. அம்பிகா பதி சிற்றின்பச் சிந்தனையின்றிப் பேரின்ப ஞான ஒளி வீச நூறு பாடல்கள் பாடுவதாயின், அவன் மன்னிப் படையக்கூடும் என்பதே அத்தீர்ப்பு. கம்பனும் அவைப் புலவரும், புரவலரும் இதற்கு ஒப்புக்கொண்டனர். அம்பிகாபதி இச்செய்யுள்கள் பாட முனைந்தான்.

அம்பிகாபதி ஆண்டான் காப்புச் செய்யுளை முதற் படிவமாகத் தொடங்கிப் பேரின்பப் பொருள்கள் கொண்ட நூறு பாடல்களைப் பாடி வந்தான். அரசிளங் குமரி தம் கழுத்தணி மாலையில் நூறு மணிகளை எடுத்து

பாட்டுக்கு ஒன்றாக எண்ணி வந்தாள். அம்பிகாபதி பேரின்ப ஞானச் சோதி மிளிர தொண்ணூற்று ஒன்பது பாடல்களும் பாடி முடித்தார். பெண் புத்தி பின் புத்தியன்றோ! காப்புச் செய்யுளையும் சேர்த்து, அது நூறு பாடல்கள் என அரசிளங்குமரி தேர்வு கொண்டு, அம்பிகாபதி வெற்றியடைந்துவிட்டதாகத் துள்ளி எழுந்து தலை தூக்கித் தம் அன்பர் முகம் நோக்கினாள்.

## அம்பிகாபதியை அவலம் அண்மியது

அந்தோ! அவலம் அம்பிகாபதியை அண்மியது! இன்னும் ஒரு பாட்டு ஆற்றிய பின்னரே அது நூறு பாடல்கள் ஆகும் என்பதை மறந்தான். உடனே அம்பிகாபதி நூறுவது பதிகத்தை சிற்றின்பப் பொருள்கொண்டு பாடிவிட்டான்.

முன்னம் செய்த வினை அம்பிகாபதியை மூண்டு கொண்டது. அரசன் தண்டனைப்படி அவ்விதி அம்பிகாபதியைக் கொலைக்களத்துக்கு அனுப்பிவிட்டது. கம்பர் முதலானோர் வாதங்களுக்குச் சோழன் செவிசாய்த்திலன். அரசன் அருந்தவச் செல்வியின் காதற் சொற்கள் கனலென அன்று அவன் உடம்பைச் சுட்டன. இன்று அத்தணலின் வன்மை அம்பிகாபதியைச் சுட்டுச் சாம்பலாக்க முனைந்தது. கொலைச் சாலையில் குமரன் உயிர் துறந்தான்.

அது கண்டு மனம் பொறாத அரசன் மகளாருமா அவன் அண்மையிலேயே ஆவி துறந்தாள். என்னே!

காதலின் கைத்திறத்தால் நேர்ந்த கடும் விதி. பாவம்! மகன் தந்தைக் காக்கும் ஈமக்கடன்களை, கம்பர் தம் மகனுக்குச் செய்ய நேர்ந்தது. முன்னை வினைப்பயன் என்று கூறுதல் இதுவன்றோ!

பின்னர் பன்னெடு நாட்கள் சென்றன. கம்பன் சோணாட்டின் மீது வெறுப்புற்றான். தம் அருந்தவப் புதல்வன் சோழ அரசன் மகள்மீது மையலுற்ற காரணம் பற்றி உயிர் நீத்த உண்மை அவர் இதயத்தைச் செல்லரித்தது. மேலும் கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்தில் சடையப்ப முதலியாரை ஆங்காங்கு சிறப்பித்துப் பேசி இருப்பது சோழ மன்னருக்குக் கொஞ்சமும் பிடித்திலது. சோழன் கம்பரைத் தம் அவையில் வைத்திருந்தானெனினும், அவரிடம் முன் போல அன்பு கொள்ளவில்லை. ஆனால் முனிவனை முனிந்து கொண்டதுமில்லை. ஒருக்கால் இது கண்ட கம்பன்

> " மன்னவனும் நீயோ! மண்ணுலகும் இவ்வளவோ
> உன்னையோ யான் புகழ்ந்திங் கோதுவது—என்னை
> விருந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ—
> உண்டோ
> குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு ? "

என்று கூறி அவன் நாட்டை விட்டகன்று, ஓரங்கால் நாட்டரசன் பிரதாபருத்திரன்பாற் சென்று அங்கு தங்கி இருந்தனர்.

## ஓரங்கால் மன்னன் அடைப்பக்காரன்

அவ்வரசன் தமிழன்பன். கம்பர் கவி நலன்களை நன்குணர்ந்தவன். கம்ப ராமாயணத்தின் பொருள

நலனை அவரே சொல்லக் கேட்டு அச்சுவையில் மகிழ்ந் தான். அவருக்கும் சிறந்த விருதுகளை வழங்கி அவரைச் சிறப்பித்தான். தமக்கு வேண்டுவது நல்கி, விழைந்து நிற்கும் பிரதாபருத்திரனை கம்பர் கேட்டுக்கொண்டது ஒன்றுண்டு. தமக்கு வேண்டும்சமயம் பிரதாபருத்திரன் தம் அண்மையில் அடைப்பக்காரனாகப் பணியாற்ற வேண்டும் என்பதே அவர் விருப்பம். அவ்வரசனும் அதற்கு மறுத்திலன்.

## அந்தரங்க உடன்பாடு அவைக் களத்தில்

நீண்ட நாள் ஓரங்க தேசத்தில் தங்கியிருந்த கம்பர், பின்னர் ஒரு சமயம் சோழநாடு செல்ல நேர்ந் தது. அங்கு அவைக்களம் செல்லும்போது, அரசன் தம்மிடையுள்ள ஓர் உடன்பாட்டைஞாபகப்படுத்தினார். அது மறை நூல் ஆசிரியரான கம்பருக்கு ஓர் காவலன் அடைப்பக்காரனாகப் பணியாற்ற உடன்பாடு கொடுத் தது. இதைக்கம்பர் மறுத்திலர். உடனே அவர் பிரதாப ருத்திரனுக்கு ஒரு முடம்விடுத்தார். ஓரங்கால் மன்னன் கம்பருக்கு முன்னம் வாக்குறுதி கொடுத்தபடி கம்ப ருக்கு அடைப்பக்காரனாக சோழன் அரசவையில் பணி யாற்றினான். இது கண்ட சோழ மகிபன் வெட் கினான்.

## வஞ்சினம்: ஆனால் ஆண்டான் நியதி

அம்பிகாபதி ஆண்டவன் அருட்பாதத்தை அடைந்த அன்றைய நாளிலிருந்து கம்பருக்கு இவ்வுலக வாழ்வு கசப்பாகிவிட்டது. வாழ்நாள் கடத்த, நாடெங்

கும் சுற்றி, உற்ற நலன்களை வழி தடுக்காது ஏற்று, எத்தகைய துன்பம் வந்திடினும் அவற்றை மனமுவந்து ஏற்றுக் காலம் கழித்துவந்தார். இங்ஙனம் அவர் ஒரு நாள் தம்மகத்தே அமர்ந்து ஏடும் எழுத்தாணியும் ஏந்தி நூலியற்றி வந்தார். அச்சமயம் சோழ இளவரசன் கானகத்தில் கன்னி வேட்டைக்குச் சென்றிருந்த போது, அவனை ஒரு காட்டானை துரத்தி வந்தது. அவன் அது கண்டு மருண்டு கம்பர் இல்லம் புகுந்து வேண்டினன். தம் அருமைச் செல்வனை உயிர்க் கொலை புரிந்த சோழமன்னன் குமரன் அல்லவா அவன்! எனவே கம்பன் தன் வஞ்சினம் தீர்க்க எண்ணி, ''அக்காட்டானை விட்டுவிட்டால், இக்கவியானை உன்னை விட்டு விடுமா'' எனத் தம் கை எழுத்தாணியை அவன் இதயத்தில் பாய்ச்சிக் கொல்லத் துணிந்தார். ஆனால் அவன் குற்றமற்ற முகம் கொலை பாவத்தைச் செய்யத் தகாதெனை அரற்றியது. ஆதலின் அவனைத் தம்மகத்தே சிறிது நேரம் வைத்திருந்து அரசர் பால் செலுத்தி விட்டனர்.

## சோழன் வெகுண்டான்

சோழன் கம்பர் வஞ்சினம் உணர்ந்தான். தம் வாழ்வில் கம்பர் வாய்ப்புக் கிடைத்தபோது, இன்னல் விளைவிப்பாரென்றே அவன் மனதில் தோன்றிற்று.

## கம்பன் மார்பில் கூரம்பு பாய்ந்தது

கடிதில் கம்பரை கழிவு செய்துவிடுதல் சாலத்தகும் என்றுறுதிகொண்டான் சோழ மன்னன்,

ஆதலின் கம்பரைக் கொல்ல ஓர் அரிமாவை வால் முறுக்கிச் செலுத்தினன், வெகுண்டு வந்த சிங்கம் கம்பர் திருவருளுக்கு அஞ்சி விண்ணில் விண் மீன் வீழ்ந்தொழிவதுபோல், துள்ளி விழுந்து ஆவி நீத்தது, அதுகண்ட சோழன் மேலும் வெகுண்டு, கம்பர் உயிர் தரிப்பரேல் தமது வமிச நாசமெனத் தீர்ப்புக்கொண்டு தம் கை கூர் அம்பை கம்பர் மார்பில் செலுத்தினன். அந்தோ! கம்பர் ஆவி துடித்தார். அரையன் தனக் கிழைத்த இன்னு குறித்து மனம் நொந்தான், சடையப்ப வள்ளல் தமக்குச் செய்த பேருபகாரத்தை அப்போ தும் எண்ணி,

“ஆன்பாலுந் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேம்பாய் உண்டு தெவிட்டு மனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா! கம்பன்
இறக்கும்போ தேனும் இனி?”

எனக் கூறி உயிரிழந்தார். என்னே! கவியரசன் புவியரசனுல் கொல்லப்பட்ட நியதி.

## 3. ஒட்டக்கூத்தர்

### என்புருகப்பாடும் கூத்தர்

தமிழ் மணம் மிகுந்து கனிரசம் ததும்ப, கேட்போர் மனம் நெகிழ உள்ளம் குழைந்து, என்புருகப் பாடும் வன்மை, புலவர் அனைவருக்கும் உண்டென்பது உண்மையன்று. இலக்கிய இலக்கணம் தெரிந்திருந்தும் உணர்ச்சியுடன் உள்ளக் கிளர்ச்சியும், மதியூகமும் கொண்டவருக்கே அது முடியும். மாற்றானும் தலை வணங்கப் பாடி, மூவேந்தரும் முடியுடை மன்னரும் தம் சொல் நயம் அறிந்து மகிழும் வெண்பாக்களைப் பாட வன்மைகொண்டிருந்த முன்காலத்துப் புலவர்களுள் ஒட்டக்கூத்தர் ஒருவர். அவர் காவியங்கள் கற்றவர் மனதில் இன்புருகப் பாயும்.

கல்வியிற் பெரியார் கம்பர் என்பது அவர் வரலாற்று முறையில் காணப்படும். ஆனால் அவரைப் போல, தமிழகத்தில் தமிழ் மறைகளிடையே ஒட்டக்கூத்தர் வெண் குஞ்சரத்தின் கீழ் வாழ்ந்தார். ஒட்டக்கூத்தர் வாழ்நாட்குறிப்பு இனிமையானது.

### நடம் பிடித்து ஆடியக் கூத்தப் பெருமான்

செந்தமிழ்ச் செல்வியின் அருந்தவப் புதல்வர்களாகத் தோன்றிய தேன் கவிவாணர்களுள் ஒட்டக்கூத்தர் ஒருவர். அவர் சோழ வளநாட்டிலே மலரி என்ற திருப்பதியிலே செங்குந்தர் மரபில் உதித்த பூமான். இவருக்குக் கூத்தர் எனப் பெயரிடப்பட்டது அம்பலத்தில் அம்பிகையுடன் நடம் பிடித்து ஆடிய

எம்பெருமான் கூத்தன் எனப்பட்டதுபற்றி ஆகும். ஆகவே அவர் நினைவுகொண்டு அவருக்கு இப்பெயர் ஏற்பட்டது.

## நாலடிக் கோவை

கூத்தர் சைவ சமயம் பற்றியவர். சிறு வயதி லேயே தேவாரம் முதலியவற்றை நன்குணர்ந்து அதில் புலமை பெற்றார். இளமையில் கூத்தர் சைவத் திரு முறைகளை அழகாகப்பாடி, கற்றுணர்ந்தோர்க்கு உற்ற நண்பராக விளங்கினர், கம்பரைத் தமிழ்க் குன்றத்தின் உச்சியில் உயர்த்தி வைத்தவர் சடையப்ப முதலியார். அஃதேபோல் ஒட்டக்கூத்தர் சடையப்ப வள்ளலாரின் தந்தையார் ஆசி பெற்றவர். அவர் மூலம் ஒட்டக்கூத்தர் தமக்குவேண்டிய துப்புரவுகளைப் பெற்று, மிடிபோக்கி இன்புற்றிருந்தார். அவர் ஞாபகச் சின்னமாகப் பாடிய நாலாயிரக்கோவை என்னும் நூலில் இத்தந்தையாரின் வள்ளன்மை இயல்கள் காணலாம்.

## கவி இராக்கதன்

கூத்தர் சிறுவயதில் தொல்லானை ஆசிரியனை அண்மி, ஐம்பெருங்காப்பியங்கள், சங்க நூல்கள் முதலியவற்றை ஐயமறப் பயின்றார். இளமைப் பருவத்திலேயே சிறந்த வருணனைக் கவிகளைப் பாட வன்மை பெற்றிருந்ததால் இவருக்கு "கவி இராக்க தன்" என்ற பட்டப்பெயரும் அமைவதாயிற்று.

ஒருநாள் கூத்தர் உறங்கும்போது கலைமகள் அவர் முன் தோன்றி அவர் நாவில் ஏதோ எழுதிச் சென்ற

தாகக் கனுக்கண்டார். அதுமுதல் கூத்தர் மொழியில் தமிழ் கொழிப்பதாயிற்று. கல்வி என்னும் கடலில் அவர் தமிழறிவு என்னும் உயர் முத்தைக் கண்டெடுத்ததுபோல் மகிழ்ந்தார், விரைவில் அவர் பூமகள்மீது 'அரும்பைத் தொள்ளாயிரம்' என்ற அழகிய காவியத்தைப் பாடினர்.

## ஒட்டப்பாடினர்

அப்போது சோழநாட்டில் விக்கிரம சோழன் என்பான் செங்கோல் செலுத்தி வந்தான். கூத்தர் அவனை அண்மி தம் புலமை தெரிந்து ஆதரிக்கும்படி வேண்டிக்கொண்டார். அங்ஙனமே அரசர் கூத்தரைத் தம் அரசவையில் இருத்திப் பல்லக்கு, சின்னம், கம்பளம் முதலிய வரிசைகள் தந்து சிறப்புச் செய்தான். கூத்தர் அரும்பைத் தொள்ளாயிரம் பாடியபோது, அதன் பொருள் நயம் அமுதினும் இனிமை கொண்டிருத்தல் பற்றி அனைவரும் புகழ்ந்தார்கள். அப்போது விக்கிரமன் ஒட்டக் கூத்தரை நோக்கிப் "புலவரே! நீவீர் இப்பாடலை ஒட்டப் பாடுவீராக" எனப் பணித்தார். அதுகேட்ட கூத்த முதலியார்

"நடித்தது நச்சர வுச்சியின் உச்சி மதி லிலங்கை
இடித்தது வென்ற திருபது தோள்பதின் எண்பகலே
முடித்தது பாரதம் வீரப் புலிவைப்ப மூரிச்
சென்டால்
அடித்தது பொற்கிரி விக்ரம சோழ அகளங்கனே!"

எனப் பாடினர். அது கேட்ட மன்னவர் கூத்த முதலியார் வண்டமிழ்ப் பெருமை உணர்ந்து பேருவகை பூத்து

ஒட்டப் பாடிய கூத்த முதலியாருக்கு ஒட்டக்கூத்தர் என்ற பட்டப் பெயர் அளித்தார்.

பின்பு சின்னாட்கள் காவலனுடன் இருந்து அவன் மீது ஓர் உலாப் பாடினார். அவர் தந்த விருதுகளைப் பெற்று மனமுருகி, சைவத் திலகம் ஞானசம்பந்தப் பெருமான், தமிழ் மறையோன் அகத்திய முனிவன் முதலானோர் மீது அரும் பதிகங்கள் பாடினார்.

## குமார குலோத்துங்கன்

சிறிது காலத்தில் விக்கிரம சோழனுக்குப் பின் அவன் மைந்தன் குமார குலோத்துங்கன் அரசனானன். அம்மங்கல முடி சூட்டு விழாவை ஒட்டக் கூத்தர் முன்னின்று சிறப்பாக நடத்திவைத்தார், அது முதற்கொண்டு சோழ ஆட்சியில் ஒட்டக்கூத்தர் சிறப்பு வளர்வதாயிற்று. அங்ஙனம் அவர் கோவை, உலா, அந்தாதி முதலிய பாடி தம் வெண்டமிழ் நலத்தை அண்டம் வாழ்வோர் அறியத் செய் தார்.

ஒரு சமயம் அவர் தஞ்சை மாவட்டம் அடுத் துள்ள திரிபுவனம் என்னும் சிற்றூரை அடைந் தார்.

அக்காலத்தில் அங்கு செங்குந்த மரபினர் சிறப் பாக வாழ்ந்து வந்தனர், திரிபுவனத்தில் சோழ நண்பரின் விருந்தினராக உரையும் ஒட்டக்கூத்தரைக் கண்ட அம்மரபினர் அவர் செந்நாப் புலவரென

அறிந்து, தம் குலத் தொழில் எழிலைச் சிறப்பித்து ஓர் அரிய உலா பாட வேண்டிக் கொண்டனர், ஆனால் கூத்தர் இதற்கு ஒப்பவில்லை. தம் குலத்தை ஏத்தித் தாமே பாடுவது நன்றன்று என அவர் அறம் கூறலாயினர். ஆனால் அக்குடிமக்களுக்கு இது உகந்ததெனத் தோன்றவில்லை. கூத்தர் தம் மரபை தாமே குறை கூறும் குலத் துரோகி என அவரைக் கொலை செய்யவும் துணிந்தனர்.

## ஈட்டி எழுபது

தமக்கு உற்ற இன்னலறிந்த ஒட்டக்கூத்தர் ஓடிச் சென்று சேரமான் மனை புகுந்தார். மன்னன் செங்குந்த மரபினர் ஒட்டக்கூத்தர் மீது சினங்கொண்ட வரலாறு அறிந்தார். பழிக்கார ஒட்டக்கூத்தர் வெளிப் போந்தாலன்றி தாம் செல்லோம் எனக் கூறியதைக் கேட்டு, அரசர் சற்றே அயர்த்தார். அந்நிலையில் தம்மை அடைக்கலம் புகுந்த ஒட்டக்கூத்தரை வெளியிலிருத்த மனமின்றி, தம் அருமைத் திருமகனை ஓர் பேழையிலிட்டு அவர் பால் தந்து, இப்பெட்டியில் நுமக்கு வேண்டும் ஒட்டக்கூத்தர் இருக்கின்றார். ஆதலின் நீர் செய்வன செய்மின்'' என்றார். பேடகத்தைத் திறந்து அதில் அரையன் நன்மகன் இருத்தல் கண்டு, பழிகாரர் மீண்டும் அரண்மனை உரைந்து அருங் குமரனை காவலன் பால் விடுத்து, தமக்கு வேண்டும் கூத்தரை விரைவில் வெளி அனுப்புக என்றனர். அது கண்ட மன்னன் பழிகாரர் கொடுமைக்கஞ்சி ஒட்டக்கூத்தரை, அவர் விருப்பப்படி பாடக் கேட்டுக்

கொண்டார். பாவலரும் அதற்கிசைந்து 'ஈட்டி எழுபது' எனும் அரும்பதிகத்தைப் பாடி செங்குந்தர்க்கு இன்பம் பயத்தனர். அதன் நயம் கண்ட அம்மரபினர் கூத்தரைச் சிவிகையில் இருத்திச் சிறப்புப் பல செய்து களியாட்டம் கொண்டார்கள்.

## சூரிய குலம்: சந்திர குலம்

குமார குலோத்துங்கனுக்கு ஒட்டக்கூத்தரிடம் பெரு நட்பு உண்டு. மேலும் குலோத்துங்கன் பெருந் தகையன் என ஆட்சி செய்ய அவர் ஏற்ற உதவிகள் செய்து வந்தார். அந்நிலையில் குலோத்துங்கன் மணப் பருவம் அடைந்தான். எனவே அவர் பாண்டியன் மகளை மணம் புரிவித்துப் பாண்டிய நாட்டுக்கும், சோழ நாட்டுக்குமிடையே நட்பு செய்விக்க விழைந் தார். அம்முயற்சியில் அவர் வெற்றி கண்டார். மேலும் குலோத்துங்கன் தந்தையாருக்கும் அதுவே விருப்பம். அவர் இறக்கும் தருவாயில் கூத்தரிடம் சொல்லிப்போன விருப்பு அது ஆகும். இங்ஙனம் பாண்டிய மகளைக் கோர ஒட்டக்கூத்தரே செல்ல நேர்ந்தது. அப்போது பாண்டிய மன்னன் கூத்தரை விளித்து "புலவர் கோன் கூத்தரே! உங்கள் நாடு வளப் பம் கூறுமின்" என இயம்பினன்.

ஒட்டக்கூத்தர் "பாண்டிய நாடு காவிரி நீர் வள முடையது. நும் நாட்டின் சின்னமாகிய வேப்பம்பூவை விட சிவபெருமான் உகந்தணியும் எங்கள் ஆத் திப்பூ சிறப்புக் கொண்டது. சோழர் சூரியகுலம்: சந்திர குலத்திருத்தவர் பாண்டியரன்றோ! சூரியனும் சந்திர

னும் ஒன்றுமா? புலிக் கொடியும் மீன் கொடியும் ஒப்பு எனக் கூற இயலுமா?'' எனப் பல கோள் கூறிப் பாண்டிய நாட்டைவிட சோழ நாடு மேலானது ஆதல் பற்றி நும் மக்களை எமது மன்னன் மணம் கொள்ளல் தகுதியே'' எனக் கூறினன்.

## ஒட்டக்கூத்தர் வாயடங்கினர்

அது கேட்ட பாண்டிய மன்னன் தம் குலம் ஒட்டக்கூத்தர் நாவினையில் தாழ்த்தப்பட்டது கண்டு வெட்கினர். சோழ நாட்டைவிடப் பாண்டிய நாடு ஒப்பு குறைந்தது என்ற சொல் அவன் செவியில் நாராசமெனக் கடுத்தது. அச்சமயம் தம் அவைக்களத்தில் வீற்றிருக்கும் வெண்டமிழ்ப் புலவர் எவராயினும் ஒட்டக்கூத்தருக்கு உற்ற பதில் இயம்பக் கூடுமோ எனச் சற்றே சிந்தித்தார். அவ்வளவில் அங்கு வீற்றிருந்த புகழேந்திப் புலவர் ஒட்டக்கூத்தரை நோக்கி ''சிவபெருமான திருமுடியை அலங்கரிப்பது வெண்மதியேயன்றி வெண்தணல் கொண்ட தினகரன் அல்ல. அகத்தியர் தமிழ் மொழியை அறிந்தது பாண்டிய நாட்டின் பொதிய மலையேயன்றி சோழ நாட்டின் நேரி மலையிலன்று! சைவக்கோன் சிவபெருமான் திருவிளையாடல் புரிந்தது பாண்டியநாட்டின் மதுரையிலன்றோ! நீ கூறும் திருமால் மச்சாவதாரம் கொண்டதேயன்றி, எக்காலும் புலியாகப் பிறவி எடுத்திலரே! ஆதல் பற்றி நும் அரசர் குலத்திலும் எம் அரிமா குலம் எவ்வகையிலும் தாழ்வில்லை.

அரும் பதிகங்கள் பாடி சைவத் திருமுறைகளைச் சிறப்பித்த திருஞானசம்பந்தர் சமணரோடு வாது புரிந்தபோது அவர் எழுதிய பதிகங்கள் நீர் எதிர் சென்றது வையையாற்றிலே? காவிரி நதியிலன்று! கடல் தன்அடி பணிந்தது பாண்டிய மன்னன் காலடியில் என் பதை நீர் மறந்தீர் போலும்! சோழன் பாதங்களை அது நண்ணிலது. பேய்க்குப் பகை வேப்பமலர்: ஆத்திப் பூ அன்று''

இது அறியாது உரைத்த நும் உரை அறியாமைப் பயன் என்று சொல்லாது வேறென் கூறுவது'' என்று ஆணித்தரமான விடை பகர்ந்தார்.

இது கேட்ட ஒட்டக்கூத்தர் புகழேந்திக் கல்விச் செருக்கை உணர்ந்து, அச்சமயம் அவருடன் வாது செய்வது தகாதென்று வாளாவிருந்தனர்.

பின்னர் பாண்டியன் தம் குலத்து முதியோர் இசைவுபெற்று தம் மகளாரைக் குலோத்துங்க மன்னருக்கு மணம் செய்விக்க ஒருப்பட்டான். பாண்டிய மன்னன் மனைவி கோப்பெருந்தேவி, தம் மகள் சோழ மண்டலத்தின் நற்றிலகமாய் விளங்கப் போகும் காட்சியை மனக்கண்முன் காண மகிழ்ச்சியடைந்தாள்.

## புகழேந்தி உறையூரில் உறைந்தார்

பின்னர் குறித்த நாளில் குலோத்துங்க மன்னருக்கும் பாண்டியன் திருமகளுக்கும் கடிமணம் நடைபெற்றது. குலோத்துங்கன் தம் மனத்துக் குகந்த

இல்லக்கிழத்தியின் எழில் வதனம் கண்டு இறுமாப் புடைந்தான். அவன் சின்னாட்கள் பாண்டிய நாட்டில் தங்கியிருந்து அரையன் விடைபெற்று மனைவியுடன் தம் நாடு மீண்டான். அப்போது பாண்டியன் தம் உயிரனைய வளர்த்துவந்த அருமகளை விட்டுப் பிரிய மனமின்றி, அவளுக்கு உறுதுணையாக தம் அரசவைப் புலவரைக்கூட அனுப்பினார். புகழேந்தி, அரசன் அளித்த அளவற்ற சீதனப் பொருள்களுடன் சோழ நாடு வந்தடைந்தான். புகழேந்திப் புலவரும் மகிழ் வடைந்து உறையூரில் தங்கி இருந்தார்,

புதுமணம் புரிந்து கொண்ட புரவலர் குலோத் துங்கன், புகழ்கொண்ட பாண்டியன் மகளுடன் ஆடிப் பாடி இன்புற்றிருந்தான். அரசவையில் புகழேந்தி தக்க விருந்துகளுடன் வாழ்நாளைச் சிறப்பாகக் கழித்தார்.

ஒட்டக்கூத்தர் சோழநாட்டின் கவிச்சக்ரவர்த்தி. அவர் தம்மை ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனத் திகழ்ந்தார். கூத்தர் ஒண்டமிழ் கேட்டு உவப்படைந்த குலோத்துங்கன் அவர் சொல் தட்டாது நடந்து வந்தான். ஆனால் ஒட்டக்கூத்தருக்கு புகழேந்தி ஆண்டு வாழ்ந்திருப்பது பிடிக்கவில்லை. மேலும் அவர் வன்மை யும், நா நலமும் தமக்கு நிகரெனத் திகழ்வது ஒட்டர் மனத்தை அரித்தது. மேலும் புகழேந்தி அவைக் களத்தில் இருப்பது தாம் குலோத்துங்க மன்னரிடம் கொண்ட பெரு நட்புக்கு ஊறு செய்யுமோ என அஞ்சி னர். எனவே தக்க வாய்ப்பு செய்து, குலோத்துங்கன்

இசைவுடன் புகழேந்தியை சிறைக் கூடத்துக்கு அனுப்பிவிட்டார். பாவம்! பாண்டிய நாட்டின் தலையாய கவிஞர் சோழநாட்டின் சிறைக்கூடத்தில் உறைவதாயினர்.

## சிறைக்கோட்டத்தில் புகழேந்தி

புகழேந்தி தமக்கிழைக்கப்பட்ட இன்னலின் கொடுமை ஏற்று இரும்புக் கதவுக்குப்பின் இருந்து வந்தார். குலோத்துங்கன் ஒட்டக்கூத்தரிடம் அளவற்ற விருப்புக் கொண்டிருந்தமையால், புகழேந்தியின்பால் வெறுப்புற்றிருந்தார். தமது மாமன் மனை நல்லிசைப் புலவன் தம்மகத்தில் சிறைக்கோட்டத்தில் இருப்பதை அவன் கொஞ்சமும் கவனித்திலன். அரசியும் இதை அறிந்திலள். ஆனல் சிறைப்பட்ட புகழேந்தி, அவ்வழியே சென்ற பாவையர் கவனம் பெற்றார்.

தினமும் இடுப்பில் குடமேந்தி நீர் திரட்டச் சென்ற அம்மகளிர்க்கு, புகழேந்தி "அல்லி அரசாணி மாலை, பவளக்கொடிமாலை, புலேந்திரன் தூது" முதலிய சிறு நூல்களை எழுதித் தந்து அவர் தரும் இனிய உணவை அருந்தினர். புகழேந்தியின் இச்சிறு நூற்களைப் பெற்ற அப்பைங்கொடிகள், அவற்றை வாசித்து, அக்கதைகளின் நேர்த்தியையும், கதைப் போக்கும் தெளிந்து மகிழ்ந்தார்கள். இங்ஙனம் சிறைக் கோட்டத்தில் இருத்தப்பட்டபோதிலும் புகழேந்தி தையலர் மூலம் விருந்து உணவு பெற்று இனிது காலம் கடத்தினர்.

## நவராத்திரி விழாவில்

சிறைக் கோட்டத்தில் அடைபட்ட புகழேந்தி வாளாயில்லை. அங்கு தம்முடனே அடைபட்டிருக்கும் இளம் புலவர்களைக் கூட்டி, அவர்கட்கு செந்தமிழ்ச் செல்வியின் சிறப்பியல்புகளையும் இலக்கிய இலக்கண நுட்பங்களையும் புகட்டி, சிறைக் கோட்டத்தைத் தமிழ்க் கோட்டமாக்கிவிட்டார். அவர் யாவரும் ஒன்று சேர்ந்து ஒட்டக்கூத்தரை எதிர்க்க ஏற்ற சமயம் பார்த்திருந்தனர். ஒட்டக்கூத்தர் நிரம்பப் புலமைக் கொண்டவ ரென்பது உண்மையே. ஆனல் அவர் செருக்கு மிகக் கொண்டவர். இளநாட் பாவலரை கடுமையாகக் கடாவி, தம் சொற்களுக்குப் பொருள் கேட்பார்.

அங்ஙனம் பொருள்கூற வன்மையற்றுரை, அவர் சிறைக் கூடத்தில் தனித்திருக்கச் செய்து, வருடந்தோறும் நவராத்திரி விழாவில் அவர் குடுமிகளைக் களைவித்துக் கீழ்மைச் செய்துவந்தார். இங்ஙனம் இடுக்கண்பட்ட பல நாவலர், குலோத்துங்கன் சிறைக்கூடத்தில் மடக்கப்பட்டிருந்தனர். அவ்வருடம் விழா நடத்திய போது, இத்தகைய புலவர்களை அழைத்து, ஒட்டக்கூத்தர் அவருடன் உசாவி குற்றங் காண விழைந்தார். ஆனல் அப்புலவர்களோ, புகழேந்தியின்பால் மதிநலம் புகட்டப்பட்டவர்களாதலின் கூத்தர் நடுங்கும்வண்ணம் அவர் சொல்லிலேயே குறை கூறவும் தலைப்பட்டனர்.

அந்நிலைகண்ட ஒட்டக்கூத்தர் தடுமாற்ற மெய்தி மெய்யழுந்தினர். ஆனல் இப்புலவர்கள் தம்பாற் குற்றம் காண முற்பட்ட வன்மை பெற்றது, சிறைக்

கூடத்தில் அடைக்கப்பட்டுக் கிடக்கும் புகழேந்தியின் மெய்யறிவு புகட்டப்பட்ட நியதி என்பதை அவர் உணர்ந்தார். எனவே மற்றைய புலவரை விடுத்தன ரெனினும், புகழேந்தியை விடுதலை செய்யாதொழிந்த னர்.

## புகழேந்தி: ஒட்டக்கூத்தர் நட்பு

அதை அறிந்த அரசி குலோத்துங்க மன்னனிடம் ஊடலாடினர். தம் தாய் நாட்டுக் கவிஞன், தம் கணவர் நகரில் கீழ்மைப்பட்டிருப்பது கண்டு அவள் மனம் வெதும்பியது. எனவே அவர் புகழேந்தியரை சிறை மீளச் செய்து, ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்திக்கும் நட்பரும்ப நவிந்து, அரசவையில் இரு புலவர்களும் ஏற்ற அணிகளாக விளங்கச் செய்தாள். அது முதல் சோழ அவை தமிழ்ச் சங்கமெனத் திகழ்ந்தது. ஒட்டக்கூத்தரும், புகழேந்தியும் உறுதுணை அன்பரான பின், அவர் கருத்தொருமித்த கவிகளின் இனிமையை எடுத்துரைக்கவும் வேண்டுமோ?

இங்ஙனம் சின்னுட்கள் சோழனிடம் தங்கிய பின், புகழேந்தி மன்னர் விடை பெற்ற மள்ளுவ நாட்டரசனை சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசர்கள் தலைநகரைச் சேர்ந்தார்.

பின்னர் ஒட்டக்கூத்தர் குலேர்த்துங்க மன்னனு டன் உறைவதாயினர். அரசனும் அருநாப் புலவரும் பல திருப்பதிகள் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் பெருமான், குணநலம் முதலியபற்றி அருட்பாக்கள்

பாடிக்களித்தனர். மதிநலக் கொழுந்தெனும் ஒட்டக்கூத்தர் அங்ஙனம் பாடும் பொருள் நயம் உணர்ந்து குலோத்துங்க மன்னன் களிப்பெய்தினன்.

## சிவபதமடைந்தார்

பிந்திய நாட்களில் ஒட்டக்கூத்தர் முதுமையடைந்தார். அது முதல் அவர் அரசவைக்கு வரச் சக்தியின்றி, தம் இல்லத்திலேயே அமர்ந்து, இடைவிடாத சிவபக்தி செய்து, முடிவில் சிவபதம் அடைந்தார்,

# 4. குமர குருபரர்

## தமிழகம்

முச்சங்கக் காலம் தொட்டு தமிழாராய்வு கொண்டது செந்தமிழ் நாடு. பொன்னியும் பரணியும் செழுமை செய்தது தென்னாடு. முத்தமிழ் வழுதி அமிழ்தெனும் தமிழ் கனிரசமெய்திய அகத்தின் வந்தது தமிழ்நாடு. நடம் புரிந்த பெருமான் அலகிலா திருவிளையாட்டுக் கொண்டது தீந்தமிழ்நாடு. சான்றோர் மிகுந்து செழுமை மிக்கது நம் நாடு.

இத்தகைய எழில் பூத்த நம் நாட்டிலே சோழ மண்டத்திலே வைகுண்டம் என்னும் பதியில் வாழ்ந்த தம்பதிகளுக்குத் தவப் புதல்வராகத் தோன்றியவர் நம் குமர குருபரார்.

## வைகுண்டத்தில்

வைகுண்டம் பரணியாற்றின் பாய்ச்சல் கொண்டது. நீர் வளம் நிலவளம் கொண்ட அங்நாட்டின் எழில் எங்கணும் பச்சென்றிருந்தது. அரும் புனல்கள் அதிகம் கொண்ட வைகுண்டத்தில் செழுமையற்ற வயற்புறங்கள் காண்பதரிது. மா, பலா, வாழை எனும் முக்கனிச் சோலைகளும், ஆம்பல், தாமரை, குவளை முதலிய மலர் நிறைந்த வாவிகளும், இயற்கை அன்னையின் வனப்புமிக்க விசும்பில் நாரை போன்ற புள்ளினங்களும் மிக்குற்ற வைகுண்டம் சிறப்பாகக் காணப்பட்டது.

'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை' என்றறைந் தார் ஆதியீந்த அருமந்தச் செல்வன் வள்ளுவன். வைகுண்ட மக்கள் பொய்யில்லாப் புனிதம் கொண்ட இவ்வாசகத்தின் நன்மை அறிந்தார் போலும்! அவ்வூரில் நிலம் திருத்தி வாழ்வார், செல்வம் மிகுந்து ஆன்றோர் ஆற்றிய அருந்தமிழ் நூற்களை ஐயந்திரிபற ஆராய்ந்து அறிஞரெனத் திகழ்ந்தனர். குடிகள் மனம் கொழிப்ப வாழ்ந்த அப்பதியில் குடிமக்கள் கோன் குறைவற்று செங்கோல் செலுத்தி வந்தான்.

## குமர குருபரர்

சைவத் தலைவராம் தமிழ்மறை அண்ணல் சிவ பெருமான் தமிழ் மடந்தையுடன் தாண்டவம் செய்த இக்கைலாச புரத்திலே, இன்றைக்குச் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் சண்முகச் சிகாமணிக் கவிராயர் என்பவர் வாழ்ந்தார். வேளாளர் குலத்திலுத்த இவ் வறிஞர் தீந்தமிழ்நலமறிந்து, தீம்பாலினுமினிய கவியாற் றும் வன்மை பெற்றிருந்தமை பற்றிக் கைலாசத்தில் அவரை அறியாதார் இலர். சைவப் பெரியாரிடம் பேரன்பு கொண்ட சண்முக சிகாமணிக் கவிராயர் எல்லாம் சிவன் செயல் என அவன் திருவடி வழுத்தி வந்தார்.

## புத்திரப்பேறு

சண்முக சிகாமணிக் கவிராயர் இல்லற வாழ்வை நல்லறமெனத் துலக்க வைத்த சிவகாம சுந்தரியார், அவர் விருப்பு, வெறுப்பு அறிந்து, தம் கடமை

தெரிந்து, சான்றோர் மனம் குளிர வாழ்ந்து வந்தாள். கொண்டவள் குறிப்பறிந்து இன்புற்றிருந்த அம்மையார் மனையறம் மாண்பு கொண்டிருந்ததெனினும், நெடுங்காலம் மைந்தர் பேறின்றி வாட்டம் கொண்டார். அகில முழுதும் அன்புக்கணை எய்தி தம்மை அண்டினோரை ஆசி செய்து, அவர் குறைகளை நீக்கி அருளும், சைவத் திருவருள், சிவகாம சுந்தரியார் பால் அருள் கிட்டாதது கண்டு, சண்முக சிகாமணி கவிராயர் மனக்கசிவு கொண்டார். தொண்டையில் கொங்கிரி மலர் கொண்ட நாமகள் தம சொல்லில் மிளிர்ந்திருந்தும், கவிராயர் வாழ்வில் பூமகள் புனிதம் தந்து, புத்திரப் பேறு அளித்திலது கண்டும் அவர் உள்ளம் குழைந்தது.

முடிவில் எல்லாம் வல்ல இறைவன் கருணையை எண்ணி, இத்தம்பதிகள் திருச்செந்தூர் செவ்வேள் திருவடியினை இறைஞ்சி ஏத்துவாராயினர். சிவகாமி சுந்தரியார் மன முருகப்பாடி, என்புருக நைந்து, கைகூப்பி கண்ணீர் சொரிந்து வருந்தும் நிலை கண்ட அம்மை அப்பன் திருவருள் கிட்டுவதாயிற்று. செந்தூர் தலைவன் திருவருளால் செந்நாப் புலவர் இல்லக் கிழத்தி கருவுற்று விரைவில் ஒரு செல்வனை ஈன்றெடுத்தாள். மகப்பேறு கண்ட பெற்றோர் ஆறுமுகப்பெருமான் பொன்னடியைப் பணிந்தனர்.

## மூகைப்பேறு

அகன்ற நெற்றியும் மலர்ந்த வதனமும் கொண்ட அச்சிறுவன் எழிலைக்கண்ட, சண்முக சிகாமணிக் கவிராயர் குமரவேள் நினைவு பற்றி அவருக்குக் குமர

குருபரன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார். குமர குருபரன் பொலிவு கண்டு அன்பொழுக வளர்த்து வருங்கால், அம்மகவு வாய் திறந்து பேசும் வன்மை யற்றிருத்தலைக் கண்டு மனம் உழந்தினர். தம் உயிர்ப் புதல்வன் வாய் திறவா ஊமையோ என ஐயுற்ற சிவகாம சுந்தரியார் கண்ணீர் மல்கிக் காய்ந்தனர்.

குமர குருபரன் மூகையையுணர்ந்த கவிராயர் ஆன்றோர் பலரை அண்மி, அது நீங்கும் வகை உசாவினர். ஈராண்டு கழிந்தும், அக்குழவி மழலைச் சொற் மகிழ்ச்சி தராதிருத்தல் பற்றி சிவகாம சுந்தரியார் அல்லற்பட்ட நெஞ்சம் கனிதலாயிற்று.

## திருச்செந்தூரில்

பாவம்! கவிராயர் என் செய்வார்! செந்தூர் முருகன் அருளால் பிறந்த குமர குருபரன் மூகை நீங்க, அப்பெருமான் ஒருவனே அகக்கண் திறக்கக்கூடும என்று கருதி, அத்தம்பதிகள் திருச்செந்தூரை அடைந்து அக்குழவியை அவன் பொன்னடியில் இருத்தி, ஒரு மண்டலம் நோன்புற்று இறைஞ்சினர். தம் நோன்பில் ஆண்டவன் கருணை காட்டா தொழியின் அவன் அடியிலேயே உயிர்விடத் தீர்ப்புக்கொண்டனர் அத்தம்பதிகள்.

நாடோறும் ஆறு சாமமும் நீராடி, நீறு பூசி ஐயனடி நின்று, நோன்பாற்றி வந்தனர். கண்ணீர் சொறிந்து தம்மை அண்டி நிற்கும் அடிகளின் துன்பத்தைக் கண்டிறங்கும் மறைதிரு அண்ணல், சிவகாம சுந்தரி

யாரின் சேய்க்குத் திருவருள் புரியக் கருணை கொண்டார். எனவே ஒருநாள் வைகறைப் பொழுதில் அருச்சகர் உருக்கொண்டு, தம் கோயிலிற் கிடத்தப்பட்டுள்ள சிறு மகவு முன் தோன்றி "குமர! நீ இன்று முதல் என் மகன். உனக்குத் தமிழ் அறிவு மல்கட்டும். உன் நாவில் தமிழ் கொழிப்பதாக. நாவலர் நா நலமும் ஞானமும் உன்னிடம் மிளிர்வதாக" எனக் கூறி திருவுருக்கரந்தார்,

## சிவகாம சுந்தரியார்

அப்பன் மறைந்த அங்ஙனமே அச்செல்வன் வீறிட்டுப் போந்து, தம் பெற்றோர் பால் நடந்தவற்றை நவின்றனர். மூகை யொழிந்து, மகன் வாய் திறந்து பேசும் ஆற்றல் கொண்ட குமர குருபரர் மழலைக் கண்டு சிவகாம சுந்தரி, அவனைக் கட்டியணைத்து உச்சி முகர்ந்து கனிந்த முத்தம் தந்து, உள்ளம் குழைந்தனர். முக்கனி ரசமெனப் பொழிந்த குமர குருபரர் சொல்லில் பாலும் தேனும் கலந்த பாட்டுகள், தமிழ் நலம் மிக்கக் காண்பதாயிற்று. இங்ஙனம் திருவருள் பெற்ற குமர குருபரர் தினந்தோறும நீராடி, நீறு தரித்து, திருமுன் நின்று கை கூப்பி வணங்கி, அவன் துணையை நினைத்துப் பாடுவாராயினர், ஒரு நாள் விசும்பிடை ஓர் ஒளி தோன்றி "குமர குருபரா! நீ ஞானோபதேசம் பெறவேண்டும். நீ வட நாட்டில் செல்லும்போது, உன் சொல் எங்கு தடை படுகிறதோ ஆண்டு நாம் வந்து உபதேசம் செய்வோம்" எனக் கூறியது.

## குமரக் கவிகள்

இதைக் கேட்ட குமரகுருபரர் பரமன் அருள் நோக்கி முகமலர்ந்தார். அப்பனைக் கும்பிட்டுக் கூத்தாடினார். அது முதல் அவர் நாவில் ஊற்றில் சுரக்கும் நீர் எனத் தமிழ்ச் சொல் கொழித்தது. எப்பொருள் யார் யார் வாய்ப்படினும், அப்பொருளின் உண்மையறிந்து, அதை மறவாது, அவற்றின் நயங்களைப் பிறரறியுமாறு எடுத்துரைக்கும் நாவன்மையும், பாமாலை பாடும் திறனும் கொண்டு குமரகுருபரர் திகழ்ந்தார். மேலும் உடன் பிறந்த இளவல் அவருடனேயே இருந்து கவி பாடிச் சிறந்தார். அது பற்றியே இச்சிறு சகோதரர்களுக்குக் குமார கவிகள் எனப்பெயர் வழங்குவதாயிற்று. குமரகுருபரர் பாடலுக்கு இசை வாசிக்க, அவர் உடன் பிறந்தவர் தோன்றி உரை பிறழாது இன்னுரை செய்துவந்தார். இவ்விதம் வாழ்ந்த அவர்கள் சிறிது காலம் சென்ற பின், "திருச்செந்தூர் கவி வெண்பா" என்னும் பாமாலை பாடிச் செந்தூர் முருகனை வழுத்தினர். பின்னர் அவர் 'மீனாட்சியம்மைந் தமிழ்' என்னும் அரும்பதிகத்தைப் பாடி மதுரையை அடுத்துள்ள திருப்பரங்குன்றத்தில் தங்கி இருந்தார்.

## திருமலை நாயக்கர்

அக்காலையில் மதுரையை திருமலை நாயக்கன் அரசுபுரிந்து வந்தான். அவன் சிறந்த சிவபக்தன், சைவப் பெரியாரிடம் பேரன்பு கொண்டவன் திருமலை

நாயக்கன் கனவில் திருமறைக்கோன் தோன்றி, விரைவில் குமரகுருபரரை எதிர் கொண்டழைத்து, தம் கோயிலில் அவர் பாக்களை அரங்கேற்றம் செய்விக்க என அருள் செய்தார். அங்ஙனமே திருமலை நாயக்கர் குமரகுருபரரை எதிர்கொண்டழைத்து, அவர் பாமாலை களை அரங்கேற்றம் செய்வித்தார். குமரகுருபரர் தம் அன்னையின் அருள் நினைத்து, மதுரையை வலம் வந்து, பிள்ளைத் தமிழை முறைப்படி உரையியற்றி வணங்கி னர். அது கண்டு களித்த சைவக்கோன், அவருக்குத் தம் திருக்கோலம் காட்டியருளினர்.

## நூல் அரங்கேற்றம்

தம் நூலுக்கு உகந்த பரிசில் அம்மையின் அருட் பிரகாசமெனக் நினைத்த குமரகுருபரர், சந்நிதியின் கிருபை நோக்கி பேருவகையடைந்தார். அந்நூலின் சொல்லழகையும், பொருள் நயத்தையும் குமரக் கவி களின் உரை நடையும், அப்பாமாலையில் மிதக்கும் கற்பனை எழிலையும் கண்ட, ஆண்டமர்ந்த புலவர் பெருமக்கள், குமரகுருபரர் வெண்தமிழ் அன்பு வெள் ளத்தில் மெய்மறந்து நின்றனர்.

குமரகுருபரர் அருட்பாக்களை உன்னி, மீனுட்சி அம்மையார் அரசன் திருமகளாகத் தோன்றி, குமர குருபரர் பிள்ளைத் தமிழ் கேட்டு மகிழ்ந்தனர். முடிவில் அங்ஙனம் எழுந்தருளி, அருள் வெள்ளத்தில் மிதந்து, அது முடிந்தவுடன் மறைந்தருளியவர் அம்மையே எனத் தெளிந்து திருமலை நாயக்கர், குமரகுருபரர் தெய்வப் புலமை உணர்ந்து, அவரை

சிவிகையில் இருத்தி, கண்டாமணி அளித்து, பொன் னுபிஷேகம் செய்து குடை, கொடி முதலிய சின்னங் கள் தந்து, பரிசில் பல வழங்கினர்.

பின்னர் குமரகுருபரர் நீண்ட நாள் திருமலை நாயக்கன் விருப்பப்படி அங்கு தங்கி இருந்தார். அவர் விருப்பப்படியே மீனுட்சியம்மை மீது, இரட்டை மணி மாலை, குறம் முதலிய பாடல்களைப் பாடினர். ஈண்டு அவற்றின் பகுதிகளில் சில காணலாம்.

## இரட்டை மணி மாலை

### வெண்பா

நெஞ்சே திருக்கோயில் நீ லுண்டிருண்ட குழல்
மஞ்சேந் தபிடேக வல்லிக்கு—விஞ்சி
வரும் அந்தகா! என் வழி வருதியால் இக்
கருமந் தகாதுன் கருத்து.

### கலித்துறை

நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமிழுண்டு நயந்த சில
பாவுண் டினங்கள் பலவு முண்டே பங்கிற்
கொண்டிருந்தோர்
தேவுண் டுவக்குங் கடம்பா டவிப்பசுந் தேனினின்
மைந்தாட்
பூவுண்டு நாரொன் றிலையாந் தொடுத்துப்
புனைவதற்கே.

குறம்

கொழுங்கொடியின் விழுந்த வள்ளிக் கிழங்குகல்லி
எடுப்போம் ;
குறிஞ்சி மலர் தெரிந்துமுல்லைக் கொடியில்
வைத்துத் தொடுப்போம் ;
பழம்பிழிந்த கொழுஞ்சாறும் தேறலும்வாய் மடுப்போம் ;
பசுந்தழையும் மரவுரியும் இசைந்திடவே உடுப்போம் ;
செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக்
கொடுப்போம் ;
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண்
படுப்போம் ;
எழுந்து கயற் கணிகாலில் விழுந்துவினை கெடுப்போம் ;
எங்கள்குறக் குடிக்கடுத்த இயல்பிதுகாண் அம்மே !
நீர்வாழி! தென்மதுரை நின்மலனார் அருள்வாழி !
கார்வாழி! அங்கயற்கட் கன்னிதிரு அருள்வாழி !
சீர்வாழி! கூடல்நகர்த் திருமலைபூ பதிவாழி !
பேர்வாழி! அவன்செல்வம் பெரிதூழி வாழியவே !

## மதுரைக் கலம்பகம்: நீதிநெறி விளக்கம்

பின்னர் அவர் மதுரைக் கலம்பகம் எனும் அரிய நூலைப் பாடினார். ஒரு சமயம் அரசன் வெகுநேரம் உண்ணாதிருத்தலைக் கண்டு, குமரகுருபர சுவாமிகள்,

வகுத்தான் வகுத்த வகைஅல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது.

என்று வள்ளுவர் மொழியை நினைவு படுத்தினார். ஆனால் அதன் முழுப் பொருளறியமாட்டாத திருமலை நாயக்கர் குமரரை அப்பொருள் விவரம் கொண்ட ஓர்

அரிய நூல் இயற்ற வேண்டிக்கொண்டனர். அங்ஙனமே குமரகுருபரர் நீதி நெறி விளக்கம் என்ற நூலை இயற்றினர்.

அதன் பின்னர் அவர் அங்கு சின்னாட்கள் தங்கி, நாயக்கர் பரிந்தளித்த பரிசில்களைப் பெற்று விடை பெற்றுச் சோழ நாட்டை வந்தடைந்தார். சோழ நாட்டில் திரிசிரபுரம் என்னும் பாதையிலே தாயுமானவரைக் கண்டு தரிசித்த பின் திருவானைக்காவலிலுறையும் முக்கண்ணனையும் பாடி மகிழ்ந்தார். திருவாரூர் தியாகராயரைச் சந்தித்தார். தியாகராயர் குமரகுருபர அடிகளிடம் காட்டிய அன்பு கண்டு, களி கொண்டு திருவாரூர் பரமன் திருவடிகளை எய்தினர். அங்கு அவர் என்புருகப் பாடிய பைந்தமிழ்ப் பாடல் நான் மணி மாலை என்பது ஆகும்.

## தருமபுர ஆதின குருமூர்த்தி

பின்னர் அவர் தருமபுரம் ஆதின குருமூர்த்திகளாகிய மாசிலாமணி தேசிகரைக் காணச் சென்றனர். தேசிகர் மறை மணம் கொண்ட குழுவினர் தலைவர். சைவத் தாண்டவம் தளிர்த்த தண்டமிழ்ச் செல்வியின் அருந்தவப் புதல்வன். அவர் புகழ் எங்கும் நீண்டிருந்ததைக் கண்ட, குமரகுருபரர் தேசிகரைத் தக்க விருதுகளோடு காணச்சென்றுர். தம்மை நோக்கிவந்த குமரகுருபரரை தேசிகர் பல கடாவினர், தமிழ் வன்மையில் அவருக்குள்ள புலமை அறிய தேசிகர் அவரைப் பலப் பல விஞவினர். அதில் குமரகுருபரர் பின்வாங்கவில்லை. தங்குதடையின்றி அவைகட்குத் தக்க விடை

யிறுத்துப் புன்முறுவல் செய்தார். முடிவில் தேசிகர் திருத்தொண்டர் புராணத்தில்,

ஐந்து பேர் அறிவுங் கண்களே கொள்ள
அருளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆயாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையன் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

எனப்பாடி, அதன் பொருள் நயமும் சிறப்புப் பயனை யும் கூற வினவினர். எப்பொருளுக்கும் இயல், அறம் கூற முனைந்து, தேசிகர் புன்முறுவல் கண்ட சுவாமி கள் இச்செய்யுளுக்கும் பொருள் கூறி அறிவுரை கூற முனைந்தனர். ஆனால் நா தழுதழுத்தது, சொல் தடைப் பட்டது. தேசிகனார் வினாவிற்கு விடையிறுக்கத் திகைத்தார். எனவே சுவாமிகளுக்கு, முந்திய நாட்களில் தாம் மூகை நீங்கியபோது முருகன் தந்தருளிய வாக்கு நலம் நினைத்து, அடிகளை வலம் வந்து, கை கூப்பி அடி பணிந்து தண்டனிமிட்டு "நாவிற்குத் தெவிட் டாத நன்மணியே! என் குறை மன்னித்து, ஆட் கொண்டு அருட் பிரகாசச் சுடரெனத் தகும் ஞானோபதேசம் செய்யவேண்டும்" என வேண்டி நின் றனர்.

## ஞானோபதேசம்

இது கண்ட தேசிகர், குமரன் மனப்படி "சைவச் சமயம் செழிக்க வந்த நன்மணியே! நும்பால் பல

பாடப் பெறவேண்டும். ஆனால் நீ விருப்புற்ற ஞானோப தேசம் இது போழ்து செய்வதற்கில்லை. நீ வட நாடு சென்று காசியம்பதியைக் கண்ணுற்று அத்தலப் பெரு மான் அருட் சோதியைக் கண்டு வருக. பின்னர் யாம் உமக்கு வேண்டும் உபதேசம் செய்து வைப்போம்'' என இயம்பினர். குமர குருபரர் அங்நிலையில் காசி நகர் சென்று மீள்வதை விரும்பவில்லை. தொலைவிலுள்ள அப்பதிசென்று மீளப் பல இரவு பகல் வேண்டும், வழியில் படும் இன்னல்களும் அவர் அறிவார். ஆகவே தேசிகரை நோக்கி "ஐயனே! அடியேன் காசி சென்று மீள்வோம் என உறுதியில்லை. ஆதல் பற்றி அவ்வுபதேசம் இங்ஙனமே செய்தருள்க'' என வேண் டிக்கொண்டார்.

தேசிகருக்கு இது உண்மைபெறப் புலப்பட்டதால் "குமரகுருபரா! நீ காசி சென்று மீள முடியாதாயின் தென்னாட்டில் அம்பிகை அவையில் அப்பன் நடம் பிடித்து ஆடிப் பொன்னோடு வீட்டில் உறையும் சிதம் பரம் சென்று வருக. உன் விருப்பம் நிறைவேற்று வோம்'' என்றனர்.

## மறையோன் திருவுருவக் காட்சி

இதைத் தட்டொணாத குமரகுருபரர் ஐயன் கட்ட ளையை சிரமேற்கொண்டு தென்னாடு புறப்பட்டார். வழியில் அவர் திருவருளையும் அவர் இடம் வீற்றிருக் கும் மங்கையர்க்கரசியையும் வழுத்தி, அவர் சேய் அம்மையப்பனையும் தொழுது திரும்பும் போது, "நான் மறை நன்குணர்ந்த மறையோன் உருவில் சைவச் சுடர்

தோன்றி, அடிகளுக்கு ஆசி செய்து நீர் தந்து "கவிஞரே! நீவிர் எம்மைக் குறித்துப் பிள்ளைக் கலி யொன்று பாடுதி" என இயம்பி திருவுருக் கரந்தனர்.

இதுகண்ட அடிகள், தம்எதிரில் தோன்றி மறைந்த பெருமான் கருணை நினைத்து, கடலெனும் அவர் கருணையில் சிக்கி, ஆனைமுகன் தம்பி ஆறுமுகப் பெருமான் உள்ளன்பை உன்னி கண்ணீர் சொரிந்தனர். அளப்பரிய அவர் திருவிளையாட்டுகளில் எதைக் குறித்துப்பாடுவது என்று திகைத்து, சற்றே அயிர்க்கும் போது, 'வானில் உதித்த பொன் பூத்த குடுமி' என்னும் சொல் அவருடைய செவியிற் படுவதாயிற்று. உடனே அவர் அச்சொல்லையே முதலாகக் கொண்டு, தமிழின் வன்மை உணர்ந்து பாமாலை பல பாடினர். பின்னர் அவர் அந்நூலை தெய்வச் சந்நிதானத்தில் புலவர் குழாமிடையே அரங்கேற்றி, ஆண்டு சின்னாட்கள் தங்கியிருந்தனர்.

## மும்மணிக்கோவை: பண்டார மும்மணிக்கோவை

பின்னர் குமரகுருபரர், முத்தமிழ் கொழிப்ப இசைத்த ஞானசம்பந்தர் உதித்த சீகாழிப் பதியை அடைந்து, அப்பெருமானைப் பாடி உள்ளங்கனிந்து, தில்லையம்பதி வந்தடைந்தார். ஞானதேசிகர் கட்டளையை சிரமேற் கொண்ட அடிகள் அங்கு நாற்பது நாட்கள் தங்கவேண்டியநிமித்தம், தினமும் நீராடி, நீறு புனைந்து, அம்பலத்தான் அண்மை நின்று, அவர் பொற் பாதங்களை, தம் பாமாலைகளால் அலங்கரித்து களிப்பெருங் கடலில் ஆழ்ந்தினர். அதுகாலை அவர் இயற்றியருளிய

மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, சிவகாமி இரட்டை மணி மாலை முதலாய பதிகங்கள், இறைவன் திருவருளை ஏத்துவதாயின. பின்னர் அவர் தேசிகர் பால் மீண்டு "பண்டார மும்மணிக் கோவை எனும் பதிகத்தை இயற்றி, அதைக் கோயிலில் அரங் கேற்றினர். இவையனைத்தும் கண்ட அடிகள், குமர குருபரர் தெய்வப் புலமையறிந்து அவருக்கு உபதேசம் நல்கினர். உபதேசம் பெற்ற குமரகுருபரர், தமதுள்ளம் மகிழ்ந்து ஆசான் வழிபாடு செய்ய நினைத்தார். அந்நிலையில் தம்மிடமிருந்த பொன் அனைத்தும் அவர் பொற்பாதங்களில் அடியுரையாக நல்கி,

பூதங் கடந்து புகழ்க் கூடற் சம்பந்தன் சொல்
வாதங் கிடந்து மனேலயமாய் இந்து மண்டலம் போய்
நாதங் கடந்து நடிவெளித் தாண்டி நலஞ் சிறந்து
போதல் கடந்தின்பப் பூரணமாகிப் பொலிந்ததுவே.

எனப் பாடினர். குமரகுருபரர் புலமையறிந்த அடிகள் அவரை வாழ்த்தி "குமர! நீர் எனக்களித்த இச் செல்வம் அனைத்தும் உமக்கே நாம் திரும்பத் தருகின் றேம். இதனைக் கொண்டு, நீ காஞ்சியம்பதியில் ஒரு மடம் அமைத்து அறஞ் செய்வாயாக" எனத் தமது விருப்பம் தெரிவித்தார்.

## காசிக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை

அங்ஙனமே கச்சியம்பதியை யடைந்த குமரகுரு பரர் அச்செல்வமனைத்தும் அறநெறியில் நல்கி, ஏகாம் பரநாதனையும் அவர்பால் வீற்றிருக்கும் காமாட்சியம் மையையும் வணங்கி, திருக்காளத்திமலை சேர்ந்து அங்கு

காளத்தீசுவரர் ஞானப் பூங்கோதையையும், சைவக் கோன் கண்ணப்பரையும் கைகூப்பி வணங்கி காசிநகர் வந்தடைந்தார். கங்கை மருங்கேயுள்ள அக்காசி நகர் அகக் காட்சிகள் அவர் உள்ளத்தில் புத்துணர்ச்சிகள் மல்குவதாயிற்று. ஆனால் எங்கும் இயற்கைக் காட்சிகள் மலிந்த ஆண்டு, கங்கையின் இருபுறமும் கல்லறைகள் மிகுந்து, கடிநகர் அதிகமின்றி இருத்தல் கண்டு, இங்கே தெய்வச் சிறப்பு உண்டோ என ஐயுற்றார். அது கண்ட ஐயம் நீக்கிய ஐயனாரெனப் பொலிந்த காசிவாசன் அவர் கனவில் தோன்றி "குருபரா! நீ என்னைப் பாடுவாயாக" என்றருளினார். அதுவே தம் நினைப்பு என உணர்ந்த குமரகுருபரர், விசாலாட்சி யம்மையை இடம் கொண்ட விசுவநாதப் பெருமானை அஞ்சலி செய்து காசிக் கலம்பகம் எனப் பெயரிய நூல் ஒன்றை இயற்றினார்.

இங்ஙனம் அவர் வாழ்ந்து வருநாளில் அங்கரை ஆண்டு வந்த முகம்மதிய மன்னன் அவைப் போந்து, மடம் அமைக்கத் தமக்கு வேண்டும் மனை யொன்றைக் கேட்க நேர்ந்தது. ஆனால் மொழிப் பிணக்கு கொண்ட முகம்மதிய அரசன் மொழி உணர்ந்திலராதலின், அம் மொழி தமக்கு அருள் செய்யுமாறு கலைமகளை முன்னிலைப்படுத்தி சகலகலா வல்லி மாலை என்ற நூலை இயற்றினார். அந்நூற் பொருளில் மல்கிய கலைமகளார், குமர குருபரர் மன்னன் மொழி உணரச் செய்தார்.

## உயிர் அற்ற அரிமா! உயிர் உற்ற அரிமா!

அடிகளும் அம்மொழியை விரைவில் உணர்ந்து அரையன்பாற் சென்று, தமது உள்ளக்கிடக்கையை

அவன் மொழியிலேயே உணர்த்தினர். ஆனால் அம் முகம்மதியக்கோன் அடிகளின் அருமை தெரியாது, தன் சிங்காதனத்திலேயே வீற்று, அடிகளை நிற்கவைத்துப் பேசினன். அது கண்டு கவன்ற அடிகள் "அரசே! துறவிக்கு அரசன் எம்மாட்டு! நீவிர் எம்மை நிறுத்திப் பேசுதல் நியாயமன்று" என்றுரைத்தார். ஆனால் அம் மகிபன் அடிகளை அவ்வளவிலேயே மதிக்க ஒப்பிலன். ஆனால் அடிகள் வியப்படையும் கடவுட் தன்மைகளைக் காட்டுவாராகில் தாம் அவரை சிறப்பிப்பதாகக் கூறினன்.

குமரகுருபரர் மறு நாள் அரசன் முன் காட்டிய திருக்கோலம் கண்டு அரசவை திடுக்கிட்டது. அவையிலிருந்த அனைவரும் தம் வழி ஓடத் தலைப்பட்டனர். மக்கள் குமரர் தம் வழியில் திரும்பாதிருக்க வேண்டிக் கொண்டனர்.

காளி தேவியின் திருவருளால் அரிமா மீது இவர்ந்து அரசவை விரைந்து வந்த குமரகுருபரரைக் கண்ட யார்தான் பயப்படாமலிருக்க முடியும்? இந்நிலையில் குமரகுருபரர் குடிமக்கள் கோன் முகம் பார்த்து "அரசே! நீவிர் வீற்றிருப்பது உயிர் அற்ற சிங்காதனம். ஆனால் நாம் உயிர் உற்ற சிங்காதனத்தில் அமர்ந்திருப்பது காணலாம். துறவிக்கோலத்தை அரசன் புறக்கணிப்பது எங்ஙனம் சான்று" என்றனன். அது உண்மையென அறிந்த காவலன் அடிகளுக்கு தம் அவையில் இடம் தந்து, அவரைத் தம் உற்ற நண்பரென ஏற்றுக்கொண்டார்.

## பழுக்கக் காய்ச்சிய இரும்பு

அம்முகம்மதிய அரசன், அவையில் அடிகள் ஆற்றி வந்த விரிவுரைகளின் பொருட்சுவையில் மலிந்து கிடக்கும் வீரம், நகை, இன்பத் துன்பப் பெருக்கின் சிகரம் உணர்ந்து, அவரை வியந்தான். முகம்மதிய ஆட்சியில் அவருக்கு இன்னல் உண்டாயிற்று, அழுக்காறு கொண்ட ஓர் சிலர் அவர் போற்ற வந்த தெய்வம் பொய்க் கடவுள் என்று விவாதம் செய்தனர். அது கண்ட அடிகள் பழுக்கக் காய்ச்சிய இரும்பொன்றை ஏந்திப் பிடித்து, அகிலத்தில் சைவ சமயம் சிறந்தது என்றார். இதைக் கண்ட மகிபன் உண்மையென நம்பினார். ஆனால் பழிகாரர் அவர் காட்டிய உண்மை கண் கட்டு வித்தை என்றனர்.

## குமார சுவாமி மடம்

அது கண்டு வெகுண்ட குமரகுருபரர் சைவப்பால் சிறந்ததென் பல அற்புதங்கள் செய்து காட்டினார். மன்னன், அடிகளாருக்கு வேண்டுவனவற்றை அளிப்பதாக வாக்குறுதியளித்தான்.

அடிகளுக்கு அப்போது இக்காவலன்பால், தாம் ஒரு மடம் சமைக்க இடம் விரும்பினார். அவ்வாறே அவ்வரசன் பணித்தான். அதுவேயன்றி, தம் நகரபுரத்தில் ஒரு கருடன் வட்டமிடும் அத்துணை புறம் எது வாயினும் அதனை நல்குவதாகவும் கூறினான். அது போலவே, அப்பன் அருளால், ஓர் பருந்து வட்டமிட அந்த நிலப்பகுதியை அரசன் அடிகளார்க்கு ஈந்தருளி

ஞன். மேலும் அங்கே அடிகள் விரும்பியபடி எல்லா சிறப்புகளும் செய்து கொடுத்து அங்கு ஓர் மடம் கட்டிக்கொடுத்தான். இதுவே குமார சுவாமி மடம் எனப் பெயராகியது.

## இறைவன் திருவடி சேர்ந்தார்

அன்றியும் அவர் திருமலை நாயக்கர்பாற் பரிசிலைக் கொண்டு நாயக்கர் பெயரால் ஒரு சத்திரம் கட்டி, அது செவ்வனே நடைபெறச் செய்தார்.

பின்னர் அவர் காசிக்குச் சென்றனர். அடிகள் காசியில் பல அறங்களைச் செய்து, சைவக் குமரராகப் பணியாற்றி இறைவன் திருவடியில் சேர்ந்தார்.

## 5. பிசிர் ஆந்தையார்

### ஆந்தையார் வெண்டமிழ்ப் புலவர்

பண்டைக்காலத்தில் பாண்டி வளநாட்டிலே பிசிர் என்ற ஊரில் ஆந்தையார் என்ற வெண்டமிழ்ப் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். நா நலமும் மதிநுட்பமும் கொண்டவராதலின் அவர் புகழ் எங்கும் நீண்டிருந்தது

ஆந்தையார் இளம் பருவத்திலேயே தமிழ் ஆர்வம் கொண்டு நல்லாசிரியனை அடுத்துக் கல்வி பயின்றவர். "கற்க: கற்றபின் நிற்க அதற்குத் தக" என்பதை அவர் நன்கு அறிவார். ஆதலின் நல்லொழுக்கமும் சீரிய குணமும் அறநெறி வாழ்வும் அவருக்கு அணிகலமாக விளங்கின.

கொண்டான் குறிப்பு உணர்ந்து நடப்பவளே கற்பரசி. அத்தகைய தையலரே கொண்டவன் குடிப்பெயரை முன்கொணர்வாள். இல்வாழ்வு என்பது நற்குணங்கொண்ட மனைவியுடன் நடத்தும் இல்லறம். பிசிர் ஆந்தையார் இல்லறத்தின் நல்லறமாய் விளங்க வனப்புள்ள ஒரு மங்கையை மணந்து சுகம் கொண்டவர். பிசிர் ஆந்தையாருக்கு நல் மகவுகள் உண்டு.

### 'வரப்புயர' என்றுள் ஔவை

'வரப்புயர' என்றுள் ஔவை. குடிமக்கள் வயற்புறத்தின் வரப்பு உயருமாயின், அரசன் ஆட்சியும் தாமே உயரும் என்ற உட்கருத்துக் கொண்ட இச்சிறு

வாசகம் பாண்டிய நாட்டில் உண்மையெனத் திகழ்ந்தது. பிசிர் ஆந்தையார் போன்ற பெருங்குடி மக்கள் மல்கிய பாண்டிய ஆட்சி தம்மை ஒப்பவும் மிக்கவும் இல்லைஎனத் தமிழகத்தில் திகழ்ந்தது.

## நம்பியார்

அக்காலத்தில் பாண்டிய குலத்தின் குறுநில மன்னன் நம்பியார் என்பவன். அவன் தம் பெயருக்கு ஏற்பத் தம்மை நம்பி தம் குடைக்கீழுள்ள குடிகளின் நன்மையிற் கண்ணும் கருத்தும் கொண்டிருந்தான். நம்பியார் கல்வி அறிவுடையவன். தமிழ் மொழியின் மேன்மை தெரிந்தவன். கவிபாடும் ஆற்றல் கொண்டவன்.

ஒரு சமயம் பிசிர் ஆந்தையார் நம்பியார் பெருமை கேட்டு அவர்பால் நண்ணி அருங்கவியியற்றி, அவன் தரும் பரிசில் பெற விரும்பினர். அரசன் தம்மகத்தே வந்த பிசிர் ஆந்தையாரை உபசரித்து நல்வரவேற்றான். ஆந்தையயார் மகிழ்ந்து அரசனை விளித்து,

## ஆனை வயிற்றுத் தீனி

"ஒரு காணி நிலத்தில் விளைந்த நெல்லைப் பக்குவப் படுத்திக் கவளமாக்கி யானைக்குக் கொடுக்க அதை உண்டு யானை பசி தீரும். பன்னாட்களுக்கும் அது யானைக்கு உதவும். ஆனால் நெற்கதிர்கள் தலைசாய்ந்து நிற்கும், நெல் வயலில் யானையை விடுத்தால், அது அக் கொல்லையை வீணாக மிதித்து நாசமாக்கிவிடும். அது

உண்ணும் நெல்லைவிட, அதன் காலில் மிதிபட்டு நாசமாகும் நெல் அதிகமாகும். அதுபோலவே அரையன் தன் குடிமக்களிடம் முறை தெரிந்து இறை வாங்குவது நியதி. பேராசை மிகுதியால் அதிக வரி வாங்குவது முறையன்று. அவ்விதம் மிகை வரி வாங்கும் முறை யானை வயற்புரத்தில் இறங்கி மிதிக்கும் கொடுமை போன்றதாகும்'' என்று பொருள்பட அருட்பா பாடி அறிவுறுத்தினர். அதைக்கேட்ட மன்னன் ஆந்தையார் அறிவு நலம் துணிந்து, அவரைத் தமதண்மையில் நீண்டநாள் இருத்திக்கொண்டார்.

## கோப்பெருஞ் சோழன்

அக்காலத்தில் சோழநாட்டை ஆண்டுவந்த மன்னன் பெயர் கோப்பெருஞ் சோழன் என்பது. அவன் உறையூரைத் தமது தலை நகராக்கிக்கொண்டு குடிகள் மகிழ, தம் குலம் செழிக்க ஆண்டுவந்தான். கோப்பெருஞ் சோழன் சிறந்த கவிவாணன். புலமை நிறைந்த நாவலர் நட்பை நண்ணி, அவர் தமிழ்ச் சுவையின் மணம் தெரிந்து உரையாடி மகிழ்ந்திருப்பான்.

அவன் அவைக் களத்தில் அருங்கவிப் புலவர் பலர் இருந்தனர். புல்லாற்றூர் எயிற்றியனர் போன்ற செந்நாப் புலவர்களை கோப்பெருஞ்சோழன் மிகவும் ஆதரித்தான். இதனுல் மன்னன் புகழ் எங்கும் பரவி இருந்தது. பாவலர் பலர் எண்ணும்பொழுதெல்லாம் இவரிடம் வந்து பரிசில் பெற்றுப் போயினர்.

சோணுட்டான் பெரும்புகழ் பிசிர் ஆந்தையார் காதுகட்கும் எட்டுவதாயிற்று. அவர் வள்ளண்மையை

அறிந்த ஆந்தையார் அவரை உற்ற நண்பனுக்க எண்ணினர். அவரை நேரிற்கண்டு அளாவிப் பேச அவாவிக்கொண்டார். விரைவில் அவர் நாடு செல்ல விழைந்தும், அது அச்சமயம் முடியவில்லை. ஆதலின் எம்பெருமானை நினைத்து "கோப்பெருஞ் சோழனை எப்போது காண்பேன்" என எண்ணி வருந்தினர்.

## கூடா நட்பு

பாண்டிய நாட்டின் கண் வாழும் பிசிர் ஆந்தையாரைப் பற்றிக் கோப்பெருஞ் சோழன் அதிகம் கேள்வியுற்று தமிழ்க் கடலெனத்தகும் அவரைக்காண அவா விழைந்து, தக்க வாய்ப்புக் கிடைக்குமெனக் காத்திருந்தான். இங்ஙனம் ஒருவர் முகத்தை ஒருவர் காணவில்லையெனினும் அவரிடையே உற்ற நட்பு உயிரினுஞ் சிறந்ததாக வளர்ந்து வந்தது,

## கோப்பெருஞ் சோழன் போர்க்கோலம்

உயரிய குணம் படைத்த கோபபெருஞ் சோழனுக்கு மனக்குறை ஒன்றுண்டு. தம் மைந்தர் தமக்கு முரண்கொண்ட நெஞ்சம் கொண்டவர். நல்லோன் என மானிலம் நவிலும் கோப்பெருஞ் சோழனை அவர் மக்கள் முற்றிலும் வெறுத்து எதிர்த்தனர். அரசர் அரியாசனத்தில் அமர அவர்கள் விரைந்தனர். தந்தையை உயிர்க் கொலை செய்து, அவரது அரியாசனத்தில் அமர அவர்கள் சதி செய்து வந்தது, அரசர் மனதை அரித்தது. சினம் மிகுந்த மைந்தர்

உயிர் வாழ்வதைவிட மாள்வதே மேல் என அரசன் துணிந்தான். தமது ஆட்சியில் வாழும் உயிர்கள் எவ ராயினும் அவர் அரச நிந்தனை கொண்டிருப்பது முறை யன்று. அவர் செங்கோன் முறைமைக்கு இழுக்கு செய்பவர் என்று அரசன் கூறலும், மைந்தர் வெகுண்டு அரசர்மீது போருக்கும் எழுந்தனர்.

## எயிற்றியனுர் அறிவுரை

இது கேட்ட புல்லாற்றூர் எயிற்றியனுர் அரசர் துணிபு நியதியற்றது என நவின்று, "அரசே! நீவிர் வாள் தீட்டி போருக்கு எழுந்த விதம் வியக்கத் தக்கதே! உம்மிடம் இஞ்ஞான்று மார்தட்டி தோள் காட்டி நிற்பவர் உம் பகைவரன்று; நின் மார்பின்மீது ஊர்ந்து விளையாடி, நின் தலையை நிமிர்த்தி நும்மைக் கட்டியணைத்து முத்தமிட்டு மதலைச் சொல்லாற்றிய மைந்தரன்றோ! இற்றை நாட்களில் நீர் அமர் முகத்தில் நுமது மைந்தர் முன் விழையும் வெற்றியை வேறு யாருக்குக் கூறி மகிழப்போகிறீர்! அன்றி நீர் தோல்வி யடைய நேர்ந்தால், உன் அரியாசனத்தை அலங்கரிப் பவர் வேறு எவர்? ஆதலின் நீவிர் வெகுளி ஒழிக. அறநெறி நினைதது நீர் ஆணவம் புரிக. நின் மைந்தர் முன், போர் முகத்தைத் தவிர்க்க" என வேண்டிக் கொண்டனர்.

அது கேட்ட காவலன் சினம் தணிந்தான். மதி கெட்ட தம் மகவுகளை விண்ணுலகுக்கு அனுப்பும் கீழ்மை தமக்கு வேண்டாம் என நினைத்தான். ஆனல்

இப்பேற்றினைப் பெற்று தன் விதியை நொந்துகொண்டான்.

## வடக்கிருந்தார்

எனவே கோப்பெருஞ் சோழன் தம் ஆட்சியை வெறுத்து வடக்கிருக்கப் புறப்பட்டான். கொடிய மைந்தர் சதி கண்டு புண்பட்ட அவன் நெஞ்சம் இறுதிக் காலத்தில் அரசு நீத்து, உலக இன்ப சுகங்களை நீக்கி, விருதமிருந்து, நலிவுகொண்டு, தருப்பையில் உறங்கி, உயிர்விடத் துணிந்தது நியாயமே. அதுகண்ட அவரது உயிர்த் தோழர் பொத்தியார், புல்லாற்றூர் எயிற்றியனார் முதலானோர் வருந்தினர்.

சான்றோர் பலர் கோப்பெருஞ் சோழன் இடுக்கண் கண்டு கண்ணீர் மல்கினர். அவர்கள் அரையனை நோக்கி, "அரசே! நும் அரசுரிமை நும்மக்களடைய நீவிர் துணிபு கண்டு மெச்சும் யாங்கள், நும் பிரிவாற்றுமைக் காண விழைகிலாம். காவலன் கானகத்தில் கரியைக் கன்னம் வைக்கப் புறப்படும்போது, அது கிடைக்கும் என உறுதி கொள்வான். ஆனால் வானத்தில் பறக்கும் வானம்பாடி ஒன்றை அவன் கன்னி பிடிப்பான் எனத் திட எண்ணம் கொள்ளமுடியாது. அதுபோல் நல்வினை யாற்றும் மக்கள் இறுதியில் இன்பம் நுகர்தல் உறுதி. அவ்வின்பம் இப்பிறப்பில் கிடைத்திலது எனில், மறுபிறவியிலேனும் திட்டமாய்க் கிட்டும். நல்வினை யாற்றும் யாக்கை மறைந்திடினும், அவனுடம்பு என்றும் புகழுடம்பு என்பதை நாம் மறக்க முடியாதன்றோ" என்று நவின்றனர்.

பிந்தைய நாட்களில் கோப்பெருஞ் சோழன் உடல் துவண்டபோது, அவர் உயிர் விழைந்தார். ஆனால் அதற்கு முன் தம் நண்பர் பிசிர் ஆந்தையாரைக் கண்டபின் உயிர்மாள எண்ணினார். நீண்ட நாட்களாக அவர் வருகை எதிர்நோக்கி அவர் வராமை கண்டு அவருள்ளம் கரைந்தது. அவர் தம்மிடம் கொண்டுள்ள நட்புறுதியை எங்ஙனம் மறக்கமுடியும்? ஆதலின் அவர் தம்மைச் சூழ்ந்துள்ள சான்றோரிடம் தம் விருப்பைத் தெரிவித்தனர். மேலும் தமதருகே பிசிர் ஆந்தையார் வடக்கிருக்கவும் ஓர் இடம் ஒதுக்க விரும்பினார்.

## தொலை தூர நட்பு

சோழ நாட்டரசன் கோப்பெருஞ் சோழன், சோழ நாட்டின் தொலை தூரத்திலிருப்பது பாண்டிய நாடு. அங்கு வாழும் பிசிர் ஆந்தையார் எங்ஙனம் கோப்பெருஞ் சோழன் வடக்கிருக்கும் உண்மை அறிவார்! மேலும் இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் அற்றை நாள் வரையில் கண்டிலர். ஒத்த உணர்வுகொண்ட பயன் பற்றிய கூடா நட்பு அவர்களிடை நிலவியிருந்ததேயன்றி கோப்பெருஞ் சோழனும் பிசிர் ஆந்தையாரும் ஒரு பொழுதும் கண்டிலர். இதை அறிந்த சான்றோர் கோப்பெருஞ் சோழன் உயிர் மாள்வதற்கு முன், அவர் பிசிர் ஆந்தையார் முகம் காண்பது அரிது என நினைத்தனர்.

அது கேட்ட அரசன் "நல்லீர்! பிசிர் ஆந்தையார் என் உயிர் நண்பர்! தம் பெயரை எவர் கேட்பி

னும் உடனே அவர் 'என் பெயர் கோப்பெருஞ் சோழன்' என்று என் பெயரைத் தம் பெயரெனக் கூறி மகிழ்பவர். உம் தலைவன் யாவனெனக் கடாவினால் "எம் தலைவன் கோப்பெருஞ் சோழன். அவன் சோழ நாட்டில் உறையூரில் செங்கோல் செலுத்துகின்றான்" எனக் கூறி மகிழ்வான். அவர் சொல்லில் மணம் உண்டு. மாண்பு உண்டு. மகிதலம், புகழ், நலம் உண்டு. செல்வக் குவியலிடையே செங்கோல் செலுத்திய காலத்தில் அவர் என்னைக் காணுதொழிந்தாலும் என் இறுதிக்காலத்தில் என்னைக் கண்டு மனமகிழ்வார். உள்ளங் குழைய என்னுடன் களித்திருப்பார். என்புருக என்னைப் பாடி என்னைத் தேற்றுவார். வடக்கிருக்கும் இங்கிலையில் என்னுடன் கூடா நட்பொழுகுவார்" என நவின்றார். அது கேட்ட அனைவரும் கோப்பெருஞ் சோழன் மன உறுதி கண்டு மலைத்தனர். ஆயினும் தொலைவில் உள்ள பிசிர் ஆந்தையாருக்குச் செய்தி விடுக்க வகையின்றி துயரடைந்தனர்.

## ஒன்றரக் கலந்தார்

உற்ற நண்பரின் உறுதுணைக் கொள்வது மன உணர்ச்சியன்றோ! பாண்டிய நாட்டில் உறையும் பிசிர் ஆந்தையாருக்கு இவ்வுணர்ச்சி வேகம் மேலிட்டது. சோழநாட்டில் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து படும் துன்பத்தை அவர் உணர்ந்தார். உடனே காடு மலை தாண்டி உறையூர் வந்தார். அரண்மனையில் அரசனைக் காணுமல் அவர் பதை பதைத்தார். ஆனால் அவர் வடக்கிருந்து உயிர்விடத் தீர்மானித்திருப்பது

கேட்டு, அங்குச் சென்று கோப்பெருஞ் சோழனைக் கண்ணுற்றார். அன்பர் உள்ளம் குழைந்தது. ஒருமை மனமுடைய இருவரும் ஒன்றறக் கலந்தனர். அன்புக் கண்ணீர் விட்டு ஆனந்தக்கடலில் மூழ்கினர்.

## சான்றோர் குழாம்

இதைக்கண்ட சான்றோர் வியப்பெய்தினர். வடக்கிருந்த கோப்பெருஞ் சோழனைக் காணவந்த வண்டமிழ் பாவலரான பிசிர் ஆந்தையார் பெருந்தகையைக் கண்டது வியப்பென்றே கருதினர். அதிலும் அவர் அரசனிடம் இருந்து, தம் நட்புக் கடன் தீர்க்க, அரசன் அருகிலேயே தாமும் வடக்கிருக்கத் துணிந்த மாண்பு அதனினும் வியப்பெனக் கருதினர்.

இதைக் கண்ட கண்ணகனார் கூறிய மேற்கோள் உண்மையானது. அது, பச்சையும், மரகதமும் போன்ற நவரத்தினங்கள் உற்பத்தியாகும் இடங்கள் வேறுபட்டதாயினும், முடிவில் அரசர் முடியில் அவை அமைந்திருப்பதை நோக்கின், சான்றோர் எக்குலத்தில் பிறந்தவராயினும், இறுதியில் சான்றோர் குழாம் இடையே சேர்ந்து கொள்வர்'' என்பதாம்.

# 1. ஔவையார்

## கேள்விகள்

1. ஔவையார் உடன் பிறந்தவர் யாவர்?
2. ஔவையார் பால பருவத்தைப்பற்றி எழுதுக.
3. ஔவை தமக்குத் திருமணம் வெறுப்புற்றதை எப்படித் தெரிவித்தாள்?
4. அதிகமான் ஔவையிடம் பேரன்பு கொண்டவர் என்பது எப்படி விளங்கும்?
5. "கூறாமல் சந்நியாசம் கொள்" இதன் சந்தர்ப்பம் என்ன?
6. உலகில் பெரியது எது? அரியது எது? கொடியது எது? இனியது எது? இக் கேள்விக்கு ஔவையார் விடை யாது.
7. "ஔவை கூழுக்குப் பாடினாள்" விளக்குக.

## 2. கம்பர்

### கேள்விகள்

1. கம்பரை ஆதரித்த வள்ளல் யார்?

2. கம்பர் இராமாயணம் எப்போது இயற்றினர்?

3. கம்பருக்குக் கவிச் சக்கரவர்த்தி என்ற புகழ் ஏற்பட்ட வரலாறு யாது?

4. "அரசே! நீவீர் என் அடிமை" சந்தர்ப்பம் விளக்குக.

5. கம்பர் மகனை அரசன் குமரி காதலித்த வரலாறு; அதன் முடிவு யாது?

6. கம்பருக்கு ஓரங்கல் மன்னன் அடைப்பக் காரனாக வந்த வரலாறு யாது?

7. கம்பர் மார்பில் கூரம்பு பாய்ந்த வரலாறு யாது?

# 3. ஒட்டக்கூத்தர்

## கேள்விகள்

1. ஒட்டக்கூத்தருக்குக் கவி இராக்கதன் என்ற புகழ் ஏற்பட்டதெப்படி?

2. ஒட்டக்கூத்தரை அவர் மரபினர் கொல்ல வந்த காரணம் யாது?

3. ஒட்டக்கூத்தர் இயற்றிய நூல்களில் சில கூறுக.

4. குமர குலோத்துங்கனுக்கும் ஒட்டக்கூத்தருக்குமுள்ள நட்பு எவ்விதம் பெருகிற்று?

5. ஒட்டக்கூத்தர் புகழேந்திக்குச் செய்த கொடுமை யாது?

6. புகழேந்தி சிறைக்கூடத்தில் எவ்வாறு உறைந்து வந்தார்?

7. ஒட்டக்கூத்தர் சிவபதமடைந்தது எங்ஙனம்?

# 4. குமரகுருபரர்

## கேள்விகள்

1. சிவகாமசுந்தரியார் என்பவர் யார்?

2. செந்தூர் செவ்வேள் அருளால் அவ்வம்மை-யாருக்குக் கிடைத்த அருள் யாது?

3. "உயிர் உற்ற அரிமா! உயிர் அற்ற அரிமா" இதன் சந்தர்ப்பம் யாது?

4. குருபரர் காசி யாத்திரையைப் பற்றிக் கூறுக?

5. காசிக்கலம்பகம் இயற்றிய வரலாறு யாது?

6. "சகல கலா வல்லி மாலை" என்ற நூலின் சிறப்பு யாது?

7. குமார சுவாமி மடம் எங்குள்ளது? அதைப் பற்றி விவரம் யாது?

# 5. பிசிர் ஆந்தையார்

## கேள்விகள்

1. பிசிர் ஆந்தையாருக்கு இப்பெயர் வரக் காரணம் யாது?

2. "கூடா நட்பு" அவரிடம் மிக்கது என்பது அவர் வாழ்நாளின் வரலாற்று முறையில் எவ்விதம் காணப்படும்?

3. வடக்கிருந்த மன்னன் யார்? அவர் இறுதிக் காலத்தில் பிசிர் ஆந்தையார் எங்ஙனம் அவரைச் சேர்ந்தார்?

4. பிசிர் ஆந்தையார் அடிக்கடி தம்மை என்ன வென்று கூறிக் கொள்வது வழக்கம்?

---